
பதிவு நெம் 2011 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 12 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2 |
| ☞ தனி விகிதமும் உண்டு. | |

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ளு ஆடிமீ 9 உ (24—7—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 13




## மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.




☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

# $ 500 இனம்! $ 500 இனம்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது

இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற்கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு அதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிக்கக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.



MAHA VEERIYA VIRTHI LAGIYAM

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துலசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும். வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
சு. லாஸரஸ் பண்டிதன்
ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75,

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்பட மாட்டாது

## மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று. மு. வடிவேல் செட்டி, 110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி புதுச்சேரி.

## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசியா சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S. I.)

## முக்கிய கவனிப்பு.

சந்தா நேயர்கள் பணமனுப்பும்போதும் விலாச மாற்றத்தைத் தெரிவிக்கும்போதும் தங்கள் சந்தா நெம்பரையும் தெரிவிக்கக் கோருகிறோம்.

மானேஜர், குடி அரசு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை

# சமயச் சண்டையும் கட்டுக் கதைகளும்.

(ஸ்ரீதர சுவாமி எழுதியது)

சுப்பு:— தம்பி நேற்றைய தினம் நான் இங்கு வந்திருந்தேன், உன்னைக் காணவில்லையே, எங்கு சென்றிருந்தாய்?

குப்பு:— அண்ணா, நமஸ்காரம். என் நண்பரொருவர் வீட்டில் தம் பிதாவிற்கு திதி நடக்கிறதென்றும், அதற்காக என்னை வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு சென்றிருந்தேன். திதி கொடுப்பதைக் குறித்து சில வார்த்தைகளை அவரிடம் மொழிந்துகொண்டிருந்தமையால திரும்பிவர சற்று தாமதித்து விட்டேன். என்ன விசேஷம்?

சுப்பு:— விசேஷமா? விவாதமா? நேற்றைய தினம் நம் சோணகிரி மடத்தில், ஒரு சைவனுக்கும், ஒரு வைணவனுக்கும் பலத்த விவாதம் நடந்தது முடிவில் ஒருவருக்கொருவர் கைகலந்து இருவர்களுக்கும் மண்டையுடைந்து போயிற்று. தப்புவது தம்பிரான் புண்ணியந்தான்.

குப்பு:— இது புதிதானதல்லவே. இவ்வண்ணம் நிகழ்வது சர்வசாதாரணந்தான். மனிதர்களை, மடையர்களாகச்செய்யும் மூடக்கொள்கைகளை மதத்திலிருந்து மாற்றினாலொழிய ஜனசமூகம் முன்னேற்றமடைய முடியாது. மதத்திலுள்ள அனாசாரங்களை நெருப்பிலிட்டு சுட்டுவிடாமல் இருக்கும் காலபரியந்தம் இத்தகைய சச்சரவுகள் நிகழ்ந்தே தீரும். ஹிந்துஜன சமூகம் கெட்டதற்கும், கெட்டுப்போவதற்கும் காரணமாயிருப்பது மதமாம், இந்து மதம் என்பதற்கு ஒரு பொருளும் இல்லையென்று நம் தலைவர்கள் கூறுகின்றார்கள். பொருளில்லாத மதத்தை பலமாகக் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பதால், தேசத்திற்கும், சமூகத்திற்கும் அளவில்லாத தோஷங்கள் நேர்ந்திருப்பது கண்கூடாகும். மதச் சண்டையாலும், ஜாதிச் சண்டையாலும், சஹோதர பாவனைகுன்றி, வேற்றுமையும் விகல்பமும விருத்தியாகி வருவதை யறிந்த நம் தலைவர்கள் பலர் அதை யொழிக்கவும் சமரசத்தை ஸ்தாபிக்கவும் முயன்று வரும்பொழுதும், கடவுள் பெயரால் விக்ரஹங்களமைத்து, வியாபாரம் செய்து பணம் சம்பாதித்து வயிறுவளர்க்க மக்களின் உண்மை ஞானத்தை கெடுத்து, அஞ்ஞானத்தை பரப்பிவரும் அக்கிரமத்தைதடுக்கதக்க புத்திமான்கள் புறப்படும் பொழுதும், தன்னலமுடையோரின் தகாத கொள்கைகளால் துன்பக் கடலில் விழுந்து துக்கிகளாய் பாதவிக்கும் பாலய விதவைகளின் பரிதாப நிலையைப் பரிஹரிக்க, புனர் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்ற புனிதக்கொள்கையைப் புகட்டும்பொழுதும், ஆண்டவன் பெயரால் சில தருணீமணிகளை தாசிகளாக்கி, அப்புனிதவதிகளின் கற்பைக்குலைத்து, தேசத்திற்கும், சமூகத்திற்கும் தோஷத்தையும், அவமானத்தையும் உண்டுபண்ணும் கொடிய கருமத்தை தடுக்க தயாநிதிகள் தயாராகி வரும்பொழுதும், காலஞ்சென்றவர்களின் பெயரால் கருமாந்தரம் திதி என்று கூறி கருணையின்றி பணம் பறிப்பதை நிவர்த்திக்க முயற்சிசெய்யும் பொழுதும், நம் சோணகிரிகள் குறுக்கிட்டு தடுத்துவருவதும், மதப் புரட்டால் விளைந்த தீமையேயன்றி வேறல்ல. மூடக்கொள்கைகளை முடுக்கி, சுயமரியாதையுடன் சுகஜீவிகளாய் வாழவேண்டியதற்கான வழிகளையுபதேசிக்கும் உத்தமர்களை எதிர்ப்பதிலும், வீண்விஷயங்களை விரும்பி வெறும் சண்டையிடுவதிலும், நம் சோணகிரி மடத்தார் கை தேர்ந்தவர்களாகையால், அங்கு சதா சண்டை நிகழ்வது சஹஜந்தான். ஆனால் நேற்றையதினம் நடந்த சம்பவமென்ன?

சுப்பு:— சம்பவமா? அசம்பாவிதந்தான். ஒரு சைவன் "சிவ, சிவ" என்று சொன்னான், அதை கேட்ட வைணவன், சிவ யென்று உச்சரிக்கக்கூடாதென்றான். சிவ என்ற சத்தம் எங்கள் காதில் விழக்கூடாதென்றும், அது எங்கள் சாத்திரங்கட்கு சரியானதல்லவென்றும், அரிசி, துளசி முதலான சொற்களை நாங்கள் உச்சரிப்பதில்லையென்றும், அச்சொற்களில் சிகாரம் வருவதால் அதை நீக்கி அமுது திருத்துழாயென்று பெயரிட்டழைக்கின்றோமென்றும், ஆனதுபற்றி சிகாரத்தை உச்சரிக்கக்கூடாதென்றும் சொன்னான். சிகாரத்தை உச்சரிக்கக்கூடாதென்றால், உங்கள் அகராதியில் 'ச'கரவர்க்கத்தை நீக்கியிருந்தால் நலமாயிருக்கும். சகரவர்க்கத்தை வைத்துக்கொண்டு, சிகாரத்தை உச்சரிக்கக்கூடாதென்று சொல்வதால் சி,என்பதை விட்டு, ச்சி! ச்சி! மடையாவென்று உபயோகிக்கலாமென்று சைவன் சொன்னான். இதிலிருந்து தான் தர்க்கம் துவக்கமானது. சிவன் பெரிதா? விஷ்ணு பெரிதா? உருத்திராக்கம் பெரிதா? துளசிமணி பெரிதா? எது பெரிது? என்ற கேள்விகளும், சிவன்தான் பெரிதென்று சைவனும், விஷ்ணுதான் பெரிதென்று வைணவனும் அதற்குச்சுருதி ஆதாரங்களை ஆஜர்செய்து ஒருவருக்கொருவர்வாதித்ததால் ரோஷத்தைக்கிளப்பி விட்டு முடிவில் அடிதடி சண்டையில் முடிவுபெற்றது.

குப்பு:— அந்தோ! பரிதாபம். அவசியமில்லாத அனாசாரங்களை நிறையப்பெற்றுள்ள கட்டுக்கதைகளைப் பார்த்துக்கொண்டு வீண் தர்க்கவாதங்களால் நம் சோணகிரிகள் வீணாகக் காலத்தைக் கழிக்கின்றனர். எங்கும் தெய்வச் சண்டைகளும், மதச்சண்டைகளும், வளர்ந்துகொண்டேவருகின்றன. சண்டை யுண்டாவதற்கு மதங்கள் காரணமாயிருக்கின்றன. மதம் என்பதற்கு மதி-புத்தி, மதம்-புத்தி பூர்வகமாய் நிச்சயிக்கப்படும் அபிப்பிராயங்கள் என்று பொருள்படும். புத்திமான்கள் யுக்தி அனுபவத்திற்கு ஒத்திருக்கும் சத்திய நியாயங்களான உத்தமக் கொள்கைகளை ஸ்தாபிக்காமலிருக்கவில்லை ஹிந்து மதத்தின் உட்பிரிவுகளென்று சொல்லப்படுகிற சைவம், வைணவம், முதலான சமயங்களில் சமதர்மக் கொள்கைகள் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் புரட்டுக்காரர்கள் குருட்டுக் கொள்கைகளை திரட்டி அதற்குள் புகுத்தியிருப்பதால் சமதர்மம் மிளிராமல் மறைந்துவிட்டது. அதை ஆழ்ந்து ஆராய்பவர்களுக்கன்றி அது அனுபவமாவதரிது. வேற்றுமைக்கும் சண்டைக்கும் ஆஸ்பதமான கட்டுப்பாடுகள் அனேகம் அதற்குள் நிறைந்திருப்பதால் பிரதம திருஷ்டியில் சமதர்மக் கொள்கைகள் அநாசாரமாயிருக்கின்றன. மதங்களிலுள்ள மூடக்கொள்கைகளை விலக்கி உண்மையை முற்றும் உணர்ந்தவர்கள் மிகச் சிலரேயாவர். உண்மையை உணரவொட்டாமல் தடுத்திருக்கும் கட்டுக்கதைகளை மர்க்கடமுஷ்டிபோல பிடித்துக்கொண்டிருப்பதால், இத்தகைய கலஹங்கள் ஏற்படுகிறது. இதற்கு பரிஹாரம் தேடாமலிருக்கும் காலபரியந்தம் நம் தேசத்திற்கும் சமூகத்திற்கும் க்ஷேமோதயமுண்டாகப்போவதில்லையென்பது நிச்சயம். மதங்களிலுள்ள மூடக்கொள்கைகளை நீக்கி பரிசுத்தமான சத்திய நியாயங்களை பிரகாசிக்கச்செய்து ஜனங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஆத்மீக சக்தியை வெளிப்படுத்தவும், ஜீவிதகாலத்தில் ஜீவனோபாயத்திற்காகத் தொழில்களைச் செய்ய வற்புறுத்தவும், பிரபஞ்சமெல்லாம் பொய் என்று சொல்லிக்கொண்டு ஒரு துறையிலும் இறங்காமல் தரித்திரஸ்திதிக்கு வருவதை தடுக்கவும், மதபோதகர்கள் பிரயத்தினப்படுவார்களானால் அது உலகத்திற்கு பேருபகாரமாயிருக்கும். மதபோதகர்கள் நியாயமான வழியை ஜனங்களுக்கு உபதேசியாமல் இன்னும் சுய நலத்தைக் கருதியிருப்பார்களானால் இவர்களின் மதங்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிடுமென்பது நிச்சயம் "ஞானினஸ்துல்லப லோகே காமினக்கோடிகோடய" என்ற சுருதியின் ரீதியாய், உணர்ந்தவர்கள் அரிதாகவும், கர்மகாண்டக்கட்டுக்குள் அகப்பட்டுழலுவோர்கள் கோடிக்கணக்காகவுமிருக்கின்றனரென்றியம்புவது மிகையாகாது. என்ன செய்வது? ஹிந்துஜன சமுதாயத்தின் துர்ப்பாக்கியமென்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது.

"அக்ஞ சுகமாராத்ய
சுகதாமா ராத்யதே விசேஷக்ஞ,
ஞானலவதுர் விதக்தம் நரம்
பிர்மாபிந ரஞ்ஜயதி"

என்ற பர்த்ருஹரியின் வாக்யரீதியாய் கொஞ்சம் கஷ்டப்பட்டாவது பாமரமக்களை திருத்தி விடலாம். சுலபவிவேகமுடையவர்களாயின் சுலபமாய் திருத்திவிடலாம். ஆனால் அற்பஞானத்தால் எல்லாம் அறிந்தவர்கள்போல் பாவனை செய்யும் அறிவிலிகளை திருத்தவேண்டுமென்றால் அது பிர்மனாலும் முடியாத காரியமாகுமென்பதாகும். ஆகையால் நம் சோணகிரிகளைக் திருத்துவதும் இதில் சம்மந்தப்பட்டதுதான்.

சுப்பு:— ராவணனை போன்ற ராக்ஷஸர்களை நிக்ரஹிக்கவும் சிஷ்டர்களை பரிபாலிக்கவும் வேண்டி யுகங்கள்தோறும் கடவுள் அவதாரபுருடராகி வருகின்றார் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதே! கடவுள் அவதார புருடராகி வந்தால், சண்டைக்கு ஆஸ்பதமான சாத்திரங்களைக் கண்டித்து உண்மையை ஸ்தாபிக்கவும் சோணகிரிகளை விரட்டிவிடவும் அவரால் முடியாமல் போய் விடுமா?

குப்பு:— இதை நான் நம்பவில்லை. நம்புவதற்கு இடமுமில்லை. கடவுள் அவதார புருடராக வருவது வாஸ்தவமாயிருந்தால் கர்மகாண்ட பிர்மராக்ஷஸனையல்லவா நிக்ரஹித்திருக்க வேண்டும்? ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்மக்களை அந்தகாரத்துளமிழ்த்தி அடிமைத்தனத்தை வளர்த்தி சமதர்மத்தை யழித்து வருவதும், அன்றுமுதல் இன்றுவரையில் நமது ஜனசமூகத்தின் அதோகதிக்கு ஆணிவேராயிருப்பதுவும் இந்த கர்மகாண்டபிர்மராக்ஷஸனேயன்றி, ராவணன் முதலான ராக்ஷஸர்களன்று. புத்தன், கிரிஸ்து, முகம்மதுநபி முதலான தீர்க்கதரிசிகளை, கடவுளின் அவதாரமென்று சொன்னார்கள். அவர்கள் நம் ஆசாமிகளிடம் சிக்கிக்கொண்டு பட்டபாடு உலகமறியும். தற்காலம் மகாத்மாவையும் மூலையில் உட்காரும்படி செய்துவைத்ததும் ஆச்சரியமானதல்ல. ஆதலால், கடவுள் அவதார புருடராக வந்துவிடுவதாலேயே பெரிய பிரயோஜனமொன்றும் உண்டாகப்போவதில்லை. அவருடைய ஜபமெல்லாம் நம் சோணகிரியார்களிடம் செல்லாது. ஓர் வேளை அவர் வருவதாயிருந்தாலும், திரண்ட சேனைகளுடனும் தக்க பந்தோபஸ்துடனும் வரவேண்டும். இன்றேல் நம் சோணகிரிகள் அவரை லேசில் விடமாட்டார்கள். விஷ்ணுபகவான் திரேதாயுகத்தில், அயோத்தியில் தசரதருடைய புத்திரராக அவதரித்தாரென்று புராணங்கள் கூறுகின்றன. "அந்த விஷ்ணு அவதாரமாகிய" ராமர் ராஜ்யபரிபாலனஞ்செய்துவந்த காலத்திலேயே ஒரு பிராமணனுடைய குழந்தை இறந்துபோயிற்றென்றும், அகாரணமாக அக்குழந்தை இறந்துபோவதற்குக் காரணம் என்னவென்று அப்பிராமணன் யோசித்துப்பார்க்கும்பொழுது, ஒரு "சூத்திரன்" தவம் செய்துகொண்டிருந்தானும். ஓஹோ ராஜ்யபரிபாலனம் சரியாயில்லை,

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# கோவை மகாநாட்டிற் குலவிய இன்பம்.

ஒற்றுமை வளர்ச்சி: உடன் பிறப்புணர்ச்சி தலைவர்கள் காட்சி. விரிவுரைமாட்சி சுதந்திரவிழைவு: காங்கிரஸ் நுழைவு வெற்றி முழக்கம்.

(பொள்ளாச்சி நகராட்சிக்கழக உறுப்பினர். ப. சு. இராமலிங்கம் எழுதியது.)

இனிய நாள் வந்துற்றது. இந்நாளினையே நம்மக்கள் எதிர்பார்த்தனர். இந்திய நாட்டுச் சுதந்திர இயக்க சரிதநூலில் முக்கிய பக்கம் பெற்று விளங்குவதுமந்நாளே. அந்நாள்? எந்நாள்? என்பிரேல், அஃது "நலவுரிமைக்கழக மார்ந்த நியாயக்கட்சியினர்" "காங்கிரஸ்" என்னும் தேசிய சபையிற் புகவிழைந்ததற்கும், காங்கிரசார்ந்த பிராமணரல்லாத பெருங்குடி மக்கள் நியாயக்கட்சியிற் சேரவிழைவு கொண்டமைக்கும் காரணமாய் "பிராமணரல்லாதார் மகாநாடு" கூடி நடைபெற்ற பெருநாளே.

யாங்கு நோக்கினும் மாந்தர்கள் மகாநாட்டைப்பற்றியே பேசலாயினர். ஊக்கமும், உணர்ச்சியும், உழைப்பும் உள்ள தொண்டர்கள் சூழ்ந்தனர். கூடும் நாட்கள் என்று வருமோ! என ஏங்கலாயினர். நாட்களும் சென்றன. வெள்ளிவந்துற்றது. கொங்குக் கனியாய்க் குலவும் கோவை மகாநகரில் உணர்ச்சி மிகலாயிற்று. வீதிகளில் மக்கள் கூட்டமும், நாட்டமும் தேட்டமும் அதிகரிக்கலாயின. கோவை என்றுங் கண்டிராத காட்சி கொண்டு விளங்கிற்று. தெருக்களில், வாழ்த்துரைகள் பொறிக்கப்பட்ட சித்திரவளைவுகள் நாட்டப்பெற்றன. வெளியூரினின்று வருபவர்க்கு உறைவிடமும் உண்ணுமிடமும் ஒழுங்குற அமைக்கப்பெற்றன. மக்கள் மறுநாள் சனிக்கிழமையை பேராவலோடு எதிர்பார்த்தனர். பொழுது புலர்ந்தது. கோவை புகைரத நிலையவாயிலில் எண்ணிறந்த மக்கள் குழுமினர் தலைவர்கள் வரவை அளப்பரும் ஆவலோடு நோக்கியவண்ணமிருந்த மக்கள் உள்ளங்குளிர வண்டிகள் வந்தன. இழிந்தனர் தலைவர்கள். வானளாவ வாழ்த்தொலி முழக்கினர் குழுமிய மக்கள். ஊர்வலத்திற்கென வேவசதி செய்யப்பட்டிருந்தமையின் உடனே மாபெருந் தலைவர்களை அழகுற நகர்வலம் அழைத்துச் சென்ற பின்னர் மகாநாடு கூடும் மண்டபம் நோக்கி மகிழ்ந்து ஏகினர்.

ஒழுங்குடனும் அழகுடனும் அமைக்கப்பெற்ற மண்டபத்தே பிரதிநிதிகளும் உபசாரணைக் கழக உறுப்பினரும் ஏனைய அன்பர்களும் எண்ணிலராய் அமரவும் மண்டபநாப்பண் உயரியமேடையியற்றி அதன் மிகை யிடம்பெற்ற எழிற் றவிசில் தலைவர் வீற்றிருக்கலாயினர். கோலத்தவிசில் நம் குமாரசாமியாம் சீலத்தலைவர் சிறக்கவிருந்த காட்சியைக் காணவும் கனிந்தநம உள்ளம் பறந்து இனிமை ததும்பிய முகமும, கம்பீரத் தோற்றமும் கருணையார் கண்களும், உளங்கவரும் இளநகையும், தேனொழுக நயம்படக்கூறும் இன்சொற்களும் எம்மனத்தைக் கவரலாயின. தலைவர் நிலைக்கு மிகுதியும் தகுதி வாய்ந்தார். தம் முன் சிறந்தார் இவரே என்பதற்கு எட்டுணையும ஐயமில்லை. வரவேற்புக் கழகத்தலைவரும் அரிமாநோக்குடனும் இனியதன்மையுடனும் தம் வரவேற்புரைச் சிறக்கப்படித்தனர். இவர் தம் வரவேற்புரை காலத்திற்கியைந்த நுண்பொருள் பல கொண்டு மிளிர்ந்து மாந்தருக்குப் புத்துணர்ச்சியூட்ட வல்லதாயிற்று. இதன் நுண்பொருள் விளக்கம் பின்னர் "சமயம் நேர்வுழி ஆய்வாம். தலைவரவர்களும் தமது அரிய முன்னுரை இன்னுரையினை இனிது படித்தனர். இதன் கண், ஒரு சமூகத்தாரின் நலத்தையே கருதியுழைக்கும் போலித் தலைவர்களின் சூழ்ச்சியும், மற்றுமின்னோரன்ன வகைகளினின்று மீளும் நெறிகளும், பிராமணரல்லாத பெருங்குடி மக்கள் முன்னுறும் முறைகளும் பலவாகக் காணப்பட்டன. இதனையும பின்னர் ஆய்வாம்.

தொடர்ந்த மூன்று நாட்களிலும், ஏறனைய வீறு கொண்ட தலைவர்கள் தம் சீரிய பொற்பொழிவுகளைக் கார்மேகமெனப் பொழியலாயினர். இவை கோவை நகரெங்கணும் ஒலிக்கலாயின. இவ்வுரைகளின் பயனுய் யாங்தும் புத்துணர்வு தோன்றலாயிற்று. நமது இயக்க வரலாற்று நூலிடைபுதிய அத்தியாயம புதுமையொடு தோன்றலான நோக்கமும் ஒருங்கே காணலாயின. ஒரு சிலர் இமமகாநாடு நடைபெறுங்கால் கலகம் விளையாதோ? குழப்பம் நேராதோ என எதிர்ப்பார்த்ததுமுண்டு. ஆனுல் தமிழன்னை திருவருளால் ஒரு சிறிய குழப்பமேனும் ஏற்படாமல் அமைதியோடு நிறைவெய்திய தன்மை ஈண்டு குறிப்பிடற்பாற்று. விஷயாலோசனைக் கழகம கூடியவன்று முதலில் தலைவர்களுள் கருத்து வேற்றுமைகள் தோன்றி நீண்டவாதத்திற் கிடமேற்பட்டது. எனினும் இறுதியில் யாவும் சமாதானமாய் ஒழுங்குபெற்ற நேரிய ஒருமனப்பட்டமுறையிலே முடிவுற்றது எனபதை எண்ணு இறும் பூதெய்துகின்றோம. சுருங்கக்கூறில் "வெற்றிபெற" "திறம்பட" "ஒழுங்குடன்" நடந்த மகாநாடு பலவற்றுள் இதனை முதன்மையாக கூறலாம.

இக்கோவை மகாநாட்டில் குலவிய இன்பம் யாது?

கிராமங்கள், நகரங்கள் முதலிய பலவிடங்களினின்றும் வந்தஎண்ணிறந்தபிராமணரல்லாத பெருங்குடி மக்கள் யாவரும் ஒற்றுமை ஊறிய உள்ளத்தாராய், உடன் பிறப்புணர்ச்சி (சகோதரத்வம்) செறியும் சிந்தையாராய், ஒரு குடிப்பிறந்தோர், ஒரே சமூகத்தோர் என்னும் எண்ணமுடையாராய் வேற்றுமை யொழித்து "சமபந்தி போஜனம்" செய்யுங்கால் ஏற்பட்ட காட்சி இன்பமே. எந்நாட்டில் வதிபவராயினும் எக்கிராமத்தில் உறைபவராயினும் பிராமணரல்லாதார் என்னும் பெருங்குடி மக்கள் உயரிய ஒரே சமூகத்தின் புறப்பட்டவர்கள் என ஐம்மை ஈண்டு விளக்கக்காட்டின. மகிமை தியாகண்பர்களும உடனே உண்டது குறிப்பிடற்பாற்று.

இவ்வரிய இன்பம் நுகர்ந்த பெருங் குடி மக்களே! கோவை மகாநாட்டின் நிகழ்ச்சியினை மறவாதிருமின்! என்றும் நினைமின்! இதற்கு முன்னர் கருத்து வேற்றுமை, ஒற்றுமை இன்மை, ஜாதி இறுமாப்பு, ஏற்றத்தாழ்வெண்ணம் இன்னுமின்னோரன்ன பூசல்கள் இருந்திருப்பினும இனியேனும் அவற்றை நீக்குமின்! ஒன்றுபடுந்தன்மையை நோக்குமின்! பெருங்குடி மக்களாகிய நாம ஒருங்கே கூடிய தாமொன்றினை நிறை வேற்ற எண்ணுமிடத்து நிறைவுறு தொழியுமோ? ஒற்றுமையே வலிமை தரும் என்பதை ஓர்மின்.

நம்மிடை சிலகாலம் தோன்றியிருந்த கல்யாண சுந்தரம், ஷண்முகம் முதலிய மேகங்கள் தோன்றி இன்பமழை பொழியத் தொடங்கின. இதனினும் இன்பம் வேறுண்டோ? அவர்களும் நாமும் ஒன்றாயினோம். நம்முடைய நன்மை அவர் தம நன்மை. இனி அவர் வேறில்லை நாம் வேறில்லை. யாவரும் ஒருங்குகூடி பொது நோக்குடன் உழைப்போம். நாட்டின் விடுதலையே நம்மவர் நோக்கம். அதிகாரப்பேய்க்கு அடிமைப்பட்டவர்கள் அல்லோம் என்பதை நம்மவர் தெள்ளிதில் விளக்கி அழியாப் புகழைத் தேடிக்கொண்டனர்.

சுயமரியாதையை உயிரினும்சிறந்த தாய் ஓம்ப முன்வந்தோம். சுயமரியாதை வீரர் சொல்வழி நன்னிட முன்வந்தோம். பிறப்பினுல் உயர்வுதாழ்வு இல்லை. உண்மையை விளக்க முன்வநதோம். மதுதனை ஒழிக்கவும் நகரது செழிக்கவும் ஆயமுறையினைக் கொணர்ந்தோம். உயர்ந்த அதிகாரி யாயினும் நெறிமுறை திறம்பிடில் அவரை பொருள் படுத்ாது திறம்பியசெய்கையினை உலகினர்க்குத் திறம்பட காட்டமுன்வந்தோம். எனவே இவையாவும் நம்மவர் முற்போக்கினையும், வருங்கால வாழ்வில் நம்மவர் காட்டும் திறனையும் விளக்குமென்க.

பிராமணரல்லாத பெருங்குடி மக்கட்குப் பேருவகையும், ஒற்றுமை நோக்கமும் சுதந்திர நினைவும, சுயமரியாதை யுணர்வும் அளித்த கோவை மகாடே! நின்புகழ் என்றும் நின்று நிலவுக! எம்மவர்க்கு வழிகாட்டி யாவரையும் ஒன்றுபடுத்திய நின சீரியத் தினை எவ்வாறு போற்றுவோம்! எம்மவர் காங்கிரஸ் முதலிய எவ்வியக்கங்களில் இருப்பினும் ஒரே நோக்குடையார் என்னும் உணர்வினை அளித்த நின் தன்மையை எவ்வாறு புகழ்வேம்!

அன்புவளர்த்தனை! ஆர்வம் விளைத்தனை!
ஆக்கம் வழங்கினை! ஆசிமுழங்கினை!
இன்பம் நல்கினை! துன்பம் ஒழித்தனை!
ஈன்றுள நம்மவர் ஓங்குமோர் குடியின்
உடன் பிறந்தார் எனும் உணர்வு ஊட்டினை!
ஊக்கமும் உறுதியும் உண்மையுங்காட்டினை!
எம்மவர் இனிமேல் இணைபிரியாது
ஏற்றமடைந்திடும் தேற்றம் தெளித்தனை!
ஐயம்போக்கினை! அறிவு அளித்தனை!
ஒற்றுமை ஈந்தனை! ஆகலின் உன்புகழ்
ஓங்கி நிலவுக! உலகினில் என்றுமே.

## காரைக்குடியில் திரு. நாயக்கர்.

ஆடி மீ 1-உ காலையன்று வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் புதுக்கோட்டையில், திருவாளர்களான ஆ. வி. லெ. அருணாசலம் செட்டியார், பழ. நாராயணன் செட்டியார் முதலிய இளைஞர்களால் வரவேற்கப் பெற்றுத் தனிக் காரில் காரைக்குடிக்கு அழைத்து வரப்பெற்றார். காலை 10 மணிக்குக் "குமரன்" காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த நாயக்கர் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த அன்பர்கள் அவரை மகிழ்வுடன் வரவேற்றனர். வரும் வழியில் திரளான அன்பர்கள் ஸ்ரீமான் நாயக்கரவர்களுக்கு மரியாதை செய்தனர். "குமரன்" காரியாலயத்தில் இருந்து 11-மணிக்கு அமராவதிபுதூர் சென்றார்கள். அங்கு ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார் அவர்களுடைய இல்லத்தில் தங்கியிருந்தார்கள்.

நாயக்கரவர்கள் வருகையை முன்னிட்டுக் காரைக்குடியில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. சுவரொட்டித் தாள்களும், "சுயமரியாதை ஓங்குக!" "சுயமரியாதையே சுகவாழ்வு" என்பன போன்ற பலவகை நன்மொழித் தாள்களும் ஒட்டப் பெற்றிருந்தன. ஒருவாரம் முன்னர் முதலாகவே ஏராளமான துண்டுப் பிரசுரங்கள் பரப்பப் பெற்றன. கல்லுக்கட்டியிலிருந்து காந்தி சதுக்கம் வரையில் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுமார் மாலை ஐந்து மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாயிற்று. காரில் மகாத்மாவின் படமும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதன்பின்னர் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் பலரும் கதருடை தரித்து அணி அணியாகச் சென்றனர். சிறுவயல் காந்தி ஆஸ்ரமத்தாரும் பிற அன்பர்களும் தேசிய கீதம் பாடிக்கொண்டு வந்தனர். காருக்கு முன்னர் நாகசுரம் ஒலித்துக்கொண்டிருந்தது. ஏராளமான ஜனங்கள் தொடர்ந்து சென்றனர். கூட்டத்தில் பேருணர்ச்சி பொங்கிற்று. ஊர்வலம் கல்லுக்கட்டி ஊருணிக் கரையைச் சுற்றிக்கொண்டு வந்து அம்மன் சந்நிதி வீதி வழியாக காந்தி சதுக்கத்திற்கு 6-மணிக்கு வந்து சேர்ந்தது. மேடைமீது மகாத்மாவின் படம் அலங்கரிக்கப் பெற்று மேஜை போடப்பட்டிருந்தது. அடிகளின் திருவுருவக் காட்சி கண்கவர் வனப்புடையதாக இருந்தது. சுமார் ஆயிரம் ஜனங்கள் வரை கூடியிருந்தார்கள். இன்முகத்துடன் பொலியும் இளைஞர்கள் ஏராளமாகக் காணப்பெற்றனர். பிராமணரும் பலர் வந்திருந்தனர். தனவைசிய நாட்டில் பிராமணரல்லாதார் பொதுக்கிளர்ச்சிக்கும் சுயமரியாதை உணர்ச்சிக்கும் கால்கோள்விழா நாளாகவே அந்நன்னாள் பொலிந்தது. கூட்டத்திற்குப் பலதிறப்பேரன்பரும் பிரமுகர்களும் போந்திருந்தது மகிழ்ச்சியை மிகுவித்தது. திருவாளர்களான பள்ளத்தூர் திவான்பகதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியார், சிவகங்கை வழக்கறிஞர்களான திரு எஸ். இராமச்சந்திரன் சேர்வை பி. ஏ. பி. எல், கற்பூரசுந்தர பாண்டியன் பிள்ளை, எம். பொன்னுசாமி பிள்ளை சிவகங்கை யூனியன் போர்டு தலைவர், அருணாசல சேர்வை, ஆ. தெற்கூர் சு. மு. முத்து சிவலிங்கஞ் செட்டியார், கல்லல் ஆ. மு. முருகப்ப செட்டியார், அமராவதிப்புதூர் பிச்சப்பா சுப்பிரமணியன், ஜெயங்கொண்டபுரம், வெ. ராம. மெ. மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை டி. வி. அருணாசலஞ் செட்டியார் காரைக்குடி யூனியன் போர்டு தலைவர் மு. ரு. வீர. சாமிநாதன் செட்டியார், சி. மு. அ. ரு. நாராயணன் செட்டியார், "ஊழியன்" ஆசிரியர் ராய. சொக்கலிங்கம், டாக்டர் ரகுனைசன், க. ச. கிருஷ்ணன், வ. ராமசாமி ஐயங்கார், தமிழ்ப் பண்டிதர் மாசிலாமணித் தேசிகர் தமிழறிஞர் கோ. வைத்தியலிங்கம் பிள்ளை, சல்தானப்பருசாமி ஆகியவர்கள் வந்திருந்தனர். உள்ளூரில் தனவைசிய இளைஞர்களில் முக்கியமானவர்கள் அனைவரும் வந்திருந்தனர். பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் பிரியமுள்ள பலதிற அன்பர்களும் போந்திருந்தனர். வெளியூர்களில் பல ஊர்களிலிருந்து ஊக்கமுள்ள வாலிபர்கள் வந்திருந்தனர். தேவகோட்டை, ஆத்தங்குடி, சிறுவயல், நாச்சியாபுரம், ஜெயங்கொண்டபுரம், புதுவயல், பள்ளத்தூர், வேந்தன்பட்டி, கல்லல், திருப்பத்தூர், சிவகங்கை, அமராவதிபுதூர், கல்லுப்பட்டி, கோனாப்பட்டு, பலவான்குடி, சிறுவயல், மானகிரி முதலிய ஊர்களிலிருந்து ஏராளமான அன்பர்கள் வந்திருந்தனர். கூட்டமானது ஆயிர இதழ்களாலான தாமரை மலர் போல் மகிழ்ச்சிக் கடலென விளங்கியது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் தேசிய கீதம் பாடப்பெற்றது. பின்னர் கரு. முத்து சிவலிங்கச் செட்டியார், ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியாரைத் தலைமை வகிக்கும்படி பிரேரேபித்தார். ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் ஆமோதித்தார். பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் எழுந்து பெருக்கத்துடனும் பேருணர்ச்சியுடனும் முகவுரையாகச் சில மொழிகள் பகர்ந்தார்கள். அதன் சாரம் வருமாறு:—

கனவான்களே!

இந்நாள் நமக்கு ஓர் நன்னாளாகும். வைக்கம்வீரரும் தமிழ்நாட்டின் தீரருமாகிய திரு நாயக்கர் அவர்கள் தமது அரிய கொள்கைகளை நம்மனைவருக்கும் எடுத்துரைக்கும் பொருட்டு ஈண்டுப் போந்துள்ளார்கள். அவர்களை நன்கு தெரிந்த உங்களுக்கு நான் அறிமுகப்படுத்த வேண்டுவது அநாவசியம். இந்நாளில் அவர்களுடைய கிளர்ச்சியானது தமிழ்நாடு முழுவதும் எதிரொலி செய்துகொண்டிருக்கின்றது. தற்கால நிலைமையை நோக்குங்காலத்து அவர்களுடைய பிரசாரம் தமிழ்நாட்டிற்குப் பெரிதும் இன்றியமையாததாகும். அதிலும் தனவைசிய நாட்டிற்கு மிகவும் வேண்டற்பாலதாகும். ஏழைப் பங்காளராகிய அவர்களுடைய தியாகமும், பெருந்தன்மையும், பேருழைப்பும், உண்மையுணர்வும், அளவிலா அன்பும் பெரிதும் பாராட்டற்பாலன. அவர்களுடைய சீர்திருத்தக் கிளர்ச்சியானது நமது நாட்டு மக்களின் மூடநம்பிக்கைகளையும், வீண் செலவையும், அடிமைத்தனத்தையும் நீக்குவதற்கே எழுந்ததாகும். எல்லோரும் அறிவுடன் நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே அவர்களுடைய அநுபவமிக்க ஆராய்ச்சித்திறன் வாய்ந்த உயர்மொழிகளை பிராமணீயத்திற்கு பெரிதும் அடிமைப்பட்டிருக்கும் இத்தனவைசிய நாட்டு மக்கள் ஆராய்ந்து நன்னெறியில் நடந்து இன்புற வேண்டுவது அவசியமாகும். எனது முன்னுரையை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு அவர்களைப் பேசும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பின்னர் திரு நாயக்கர் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து மேடைமீது இவர்ந்து, மகிழ்ச்சிவெள்ளத்தில் திளைத்து நின்ற நன்மக்களை நோக்கிச் சுமார் 2-மணி நேரம்வரை வெகு உருக்கமாக நகைச்சுவையுடன் அன்பும் உணர்வும் பொங்கித்ததும்பத் தேன்மாரியெனவே சொன்மாரி பொழிந்தனர். அது பின்னர் வரும்.

திரு. நாயக்கர் அவர்களுடைய அரிய சொற்பொழிவு முடிந்ததும், திருவாளர் அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் 15 நிமிஷங்கள் சில மகிழ்ச்சியுரைகளை வழங்கினார்கள். அதன் சாரம் வருமாறு:—

கனவான்களே!

இக்கூட்டத்தின் சிறப்பையும் கூடியிருக்கும் நன்மக்களின் இன்முகங்களையும் கண்டு நான் பெரிதும் களிப்புறுகின்றேன். இந்நாள் தனவைசிய நாட்டிற்குப் புத்தொளியளிக்கும் பெருநாளாகும். நமது நாட்டில் பிராமணரல்லாதார் பெரிதும் முற்போக்கை நாடாதவர்களாக இருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் அடிமைப்பட்டுச் சுயமரியாதையற்று இருக்கின்றார்கள். அதனினும் நமது தனவணிக நாட்டினர் ஒரு சிறிதும் கண்விழித்துக்கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். பிராமணரல்லாதார் பொதுக்கிளர்ச்சியின் அருமையை நமது நாட்டவர் இன்னும் நன்கு உணரவில்லை. எனவே, இந்நாளில் இத்தகைய பெரும் பிரசாரமானது இந்நாட்டிற்குப் பெரிதும் இன்றியமையாததாகும். சில ஆண்டுகளாக இக்கிளர்ச்சியானது எழுத்து மூலமும், பேச்சு மூலமும் ஒருவாறு நிகழ்ந்து வந்தது. இந்நாளிலே அது எழுத்து, பேச்சு, செயல் ஆகிய மூன்று வகையாலும் உருப்பெற்று நிகழ்கின்றது. பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் ஊக்கமுள்ள என்போன்ற அன்பர்களுக்கு இது பேருவகை தருவதே. பிராமணரல்லாதார் முன்னேற்றம், சுயமரியாதை ஆகியவை குறித்தும் சமூக சீர்திருத்தம் சமய சீர்திருத்தம் ஆகியவை குறித்தும் தமிழ்த் தாயின் தவப்பயனாகிய திரு. நாயக்கரவர்கள் திருத்தொண்டு புரிந்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் சீர்திருத்தக்கிளர்ச்சி அறக்கிளர்ச்சியேயாகும். மாறுபட்டதன்று. நமது நாட்டில் முன்னாளில் தோன்றித் திகழ்ந்த சீர்திருத்தக்காரரும் பெரியவருமான ராஜாராம் மோகன்ராய், தயானந்தர், ராமானுஜர், மாணிக்கவாசகர், ராமலிங்க சுவாமிகள் ஆகியவர்கள் அனைவரும் திரு

நாயக்கர் அவர்களுடைய பிரசாரத்திற்குச் சான்று தருகின்றார்கள். புரோகித மதத்தையும், மூட நம்பிக்கைகளையும், வீண்சடங்குகளையும் வெறுக்கும்படி அவர்கள் வழிகாட்டுகின்றார்கள். உண்மையன்பையும், ஒழுக்கத்தையும், உண்மையறிவையுமே பகுத்தறிவுடைய பெரியோர்கள் வற்புறுத்துகின்றனர். இதனையே நமது வைக்கம் வீரரும் வற்புறுத்துகின்றார். நமது வீரர் உள்ளும் புறமும் பரிசுத்த முடைய ஓர் உண்மை வீரர் ஆவர். அவரை நான், தென்னாட்டு மார்ட்டின் லூதர் என்றும் ராஜாராம் மோகனராயென்றும் வாயார வாழ்த்துகின்றேன். (கரகோஷம்) அவரை நாம் நமது தலைவராகக்கொண்டு பெரிதும் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம். உள்ளன்புடன் நம்மக்கள் முன்னேற்றத்திற்கு அவர் உழைக்கின்றார். அவர் சொல்வழி நடக்க நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம். முதலில் நம்மக்கள் பார்ப்பனீயத்தை ஒழித்துச் சுயமரியாதை பெறவேண்டுமென்பது அன்னார் பெருவிருப்பம். காரணம் என்னவெனில் வைதிகப் பிராமணர் தம்மைத்தாமே தெய்வமென்றும், தெய்வத்தாகரென்றும், பிதுர்பார்சல் கிளர்க்குகள் என்றும், நம்மூலமாகவே கடவுளுக்கும் பிதுர்களுக்கும் யாவும் போய்ச் சேரவேண்டுமென்றும ஏமாற்றிவருகின்றனர். நம்மைப் படைத்தளித்து இன்புறுத்தும் பரம் பொருளுக்கும் நமது முன்னோர்களாய பிதுர்களுக்கும் நமக்கும் தொடர்பில்லை என்று கூறினால் இது முழுப் பொய்யன்றோ? நேரில் நமக்கு ஏன் தொடர்பில்லை? நிறைந்த தொடர்புண்டு. நேர்முக வழிபாடு செய்கின்புற நமக்கு உரிமை உண்டு. இது அறிஞர் ஒப்ப முடிந்த உண்மையாகும் இதுவே இக்கிளர்ச்சியின் கருத்து. வைதிகர் பிறப்பால் உயர்வு தாழ்வு பேசித் தெய்வத்தன்மையினர் என விருது பகர்ந்துகொள்ளுதலைத்தவிர்த்து மனிதரனைவரும் சரி நிதர்சன மானவர் எனும் நல்லறத்தை நாம் நிலை நாட்டி விடுதல் வேண்டும். பார்ப்பனீயத்தை ஒழித்தலில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று புரோகிதமததைதையே அறவே ஒழித்தல். அது பகுத்தறிவுக் கொள்கை, மற்றொன்று அன்பிலாத பிராமணரை விடுத்துத் தத்தம் சாதியிலேயே புரோகிதத்தை ஏற்படுத்திச் சுருக்கமான செலவில் சடங்குகளைச் செய்வது. இவ்விரண்டில் உங்களுக்குப் பிடித்த ஒன்றை நீங்கள் அநுசரிக்கலாம். அமைதியாகப் பொறுமையுடன் நீங்கள் கேட்ட விஷயங்களை ஆழ்ந்து சிந்தித்து உண்மையைக் கடைப்பிடிக்கிறீர்களா! மூடவழக்கங்களையும, ஏமாற்றங்களையும் ஒழிப்பதில் நாம் ஒரு நாளும் பின்வாங்கவேண்டுவதில்லை. பகுத்தறிவிற்கேற்ப நாம் நடப்பதில் எவ்வித விரோதமுமில்லை. வைதிகர்கள் தெய்வத்தின் பெயரால், உண்மையின் பெயரால், அறிவின்பெயரால், அன்பின் பெயரால் ஏமாற்றுவதை இனி நாம் பொறுக்க முடியாது. மூடத்தனத்தை ஒழித்தலில் பிராமண நண்பர்களும் முன்வரவேண்டியவர்களே! நாட்டிற்கு சுயராஜ்யக் கிளர்ச்சி, எவ்வளவு அவசியமோ அவ்வளவு சீர்திருத்தக் கிளர்ச்சியும் முக்கியமாகும். இதனை எல்லோரும் நன்கு உணருதல் வேண்டும். இக்கிளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து வருபவர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். நமது நாட்டவர்கள் ஸ்ரீமான் நாயக்கரவர்களைப் பெரிதும் பெருமைப்படுத்தி அவர்களுடைய பேச்சைக்கேட்டுப் பெரும்பயன் பெறுவார்களாக. இவ்வளவோடு நான் அமர்கின்றேன்.

பின்னர் தலைவர் திரு சொ. முருகப்ப செட்டியாரவர்கள் முடிவுரையாகச்சில ஆணித்தரமான உரைகளை வழங்கினார்கள். அதன் சுருக்கம் வருமாறு:—

அன்பர்களே!

ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுடைய பேச்சைக் கேட்டு நீங்கள் பெரிதும் மகிழ்வுற்றீர்கள். அவர்கள் உங்களுக்குப் பல அரிய பெரிய இனிய விஷயங்களை எடுத்துப் போதித்தார்கள். மக்கள் முன்னேற்றம் பற்றி சுயமரியாதை பற்றியுமே அவர்கள் வற்புறுத்துகின்றார்கள். மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று கூறுகின்றார்கள். சீர்திருத்தத்தின் அவசியத்தை எடுத்துக் காட்டி மக்களைத் திருத்துகிறார்கள். இதை ஒருநாளும் பிராமணத்துவேஷம் என்று கூற முடியாது. இக்கிளர்ச்சியால் பிராமணரும் முன்னேற்றம் பெறுவர் என்பதில் தடையில்லை. இந்நாட்டு வைதிகப் பிராமணர் பொறுமையுடன் இவ்விஷயங்களை நன்கு கேட்டுத் தெளிந்து திருந்துதல் நலமாகும். எவ்வளவு பணத்தை வைதீகப் பிராமணர் பெற்ற போழ்திலும் வறுமை வாழ்வே வாழ்கின்றனர். அவர்கள் இன்ப வாழ்வு வாழ வேண்டுமானல் நற்றொழில்களைச் செய்தல் வேண்டும். பிராமணரல்லாதார் முன்னேற்றம் பெறுதல் வேண்டுமானல் பிராமணியத்தை ஒழித்தலில் பெரிதும் முன் வருதல் வேண்டும். பிராமணருக்கு மற்றவர் சொத்தடிமையாக வாழ்ந்து கப்பங்கட்டுவது பொறுக்க முடியாத கொடுமையேயாகும். தனவைசிய நாட்டில் வைதிகர் கொடுமை வருணிக்க முடியாததாகும். அதைத் துணிவுடன் எடுத்துரைத்து ஒழிக்க வேண்டிய சுயமரியாதைக் காலம் உதயமாகிவிட்டது. அடிமைத்தனத்தையும் மூடத்தனத்தையும் நீக்கி, நல்லறிவையும் நல்லுரிமையும் பெறுவதில் நாம் பின்வாங்க வேண்டுவதில்லை. நாம் தீவிரமாக வேலை செய்தல் வேண்டும். நாங்களும் நாயக்கரும் வேத விதி யென்று கட்டாயப்படுத்தி இவ்வாறே நடக்கவேண்டுமென்று ஒன்றையும் போதிக்கின்றோமில்லை. எல்லா விஷயங்களையும் நீங்கள் உங்கள் பகுத்தறிவைக்கொண்டு நன்கு ஆராய்ந்து நல்வழியில் நடக்கவேண்டுமென்றே நாங்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஒரு முறைக்குப் பன்முறை எல்லா விஷயங்களையும சிந்தியுங்கள்! காரண காரியத்தைக் கண்டு பிடியுங்கள். உண்மை புணருங்கள். உயர் நெறியைக் கடைப்பிடியுங்கள். இதுவே எங்கள் வேண்டுகோள்! வைதிகப் பிராமணர், பிராமணரல்லாதாரைப் பெரிதும் தாழ்த்தி வைத்திருக்கின்றார்கள். தாழ்ந்த நிலையே நமக்கு உரியதென்று நூல்களும் எழுதிவைத்துப் பேசிவருகின்றார்கள். நமக்கு வேதம் படிக்க உரிமையில்லை யென்றும், வடமொழி வாயில் நுழையாதென்றும் கூறுகின்றார்கள்! இதை என்னென்று கூறுவது? வடமொழி வல்ல பார்ப்பனரல்லாத பண்டிதர் பலர் உளர். வேத நுட்ப முணர்ந்த ஆராய்ச்சியாளர் பலர் நம்மில் உளர். அவைகளை நாம் கற்று வைதிக மோசடிகளை அறிந்து கொள்ளக் கூடாதெனவே அவர்கள் இவ்வாறு கூறிவருகிறார்கள். கடவுளுக்குத் தமிழ் பிடிக்காதாம். சமஸ்கிருதத்திலேதான் அவர் ஈடுபடுவாராம்? இது என்ன விந்தை! கடவுள் கூட மொழி வேற்றுமை கருதுகிறாரா? தமிழ்ப் பேராயர் நன்மொழிகள் இறைவன் செவியில் ஏறவில்லையா? பிராமண குருவாகிய சங்கராச்சாரியார் சுலநலத்தின் பொருட்டே எங்கும் பிரயாணம் செய்து வைதீகப் பிரசாரஞ் செய்கின்றார். பொதுவாகப் பிராமணரல்லாதாரிடமும் சிறப்பாக ஏழை மக்களிடமும் அவர் இரக்கங்காட்டுவதில்லை. பிராமணரைத் தவிரப் பிறருக்கு ஒரு வேளை உணவாவது அளிக்கின்றாரா? பிக்ஷையென்று பிராமணரல்லாதாரிடம் பெரும் பணம் பெற்றுக்கொண்டு, பிராமணரைப் போஷித்து அல்லாரை இழிவு செய்கின்றார். பிராமணருக்கு ஒருவகை மரியாதையும் அல்லாதாருக்கு ஒருவகை மரியாதையும் செய்கின்றார். அவர் வீணாகப் பெற்றுப் போகும் பணத்திற்கு ஒரு அளவு உண்டோ? அவரது ஆடம்பர வாழ்வால் மக்களுக்கு என்ன பயன்? அவருக்கு உதவி செய்வது பயனற்ற காரியமேயாகும். இதனை நம்மக்கள் செவ்வனே உணர்ந்து சீரிய முறையில் நடத்தல் வேண்டும். ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுடைய அரிய பணியை நம் நாட்டவர் பெரிதும் பயன் படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவர்களுடைய பேச்சும் எழுத்தும் ஜீவனில் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குவனவாகும், அவர்களுடைய 'குடி அரசு'ப் பத்திரிகையானது தமிழ்நாட்டுப் பொது ஜனங்களைக் கண்விழிக்கும்படி எளிய முறையில் போதித்து வருகின்றது. அனைவரும் விரும்பிப் படிக்கின்றார்கள். அதைச் சாதாரண பாஷையில் நடைபெறும் பத்திரிகை யென்று நாயக்கர் அவர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். சாதாரணமாக ஜனங்களைத் தட்டியெழுப்புவதற்கு அந்நடையே சிறந்த சாதனம், அவர்கள் பத்திரிகைக்கு ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வரிருக்கிறார்கள். நல்ல செந்தமிழ்ப்பத்திரிகைக்கு 500 பெயர்கூட இல்லை. நாயக்கர் அவர்களுடைய சீர்திருத்தக்கிளர்ச்சி என்றும் அறியாத ஒரு பெரும் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் தமிழ்நாட்டில் தோற்றுவித்திருக்கின்றன. தமிழர் கண்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. சுயமரியாதை உதயமாகியிருக்கின்றது. இன்று அவர்களுடைய உணர்ச்சியுள்ள பேச்சு உங்கள் அனைவர் உள்ளத்தையும் ஈர்த்திருக்கின்றது. பேச்சைக்கேட்ட நீங்கள் பொறுமையுடன் ஆராய்ந்து தெளிவுபெறுங்கள்! அடிமைத்தனத்தை உதறித்தள்ளுங்கள். மூடப்பழக்க வழக்கங்களை அச்சமின்றி ஆண்மையோடு

## கொங்குமண்டல கற்பூரச்செட்டியார்களென்கிற நாயக்கமார்களின் முதலாவது மகாநாடு.

ஷை மகாநாடு 1927-௵ ஜூலை-மாதம் 6, 7 தேதிகளில் ஈரோட்டில் ஸ்ரீ நடராஜ நாடகக் கொட்டகையில் கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டும், நகரசபைத் தலைவரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ராவ்பஹதூர் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், மு. ஷ முத்துக்கருப்பஞ் செட்டியார் சேலம் பழனிச்சாமிப் பண்டாரம், முதலிய பிரமுகர்கள் சங்கங்களால் உண்டாகும் பயன், ஜாதி, மதம், ராஜீகம், ஊக்கம், ஒற்றுமை, கல்வி, கைத்தொழில், சுயமரியாதை, சமத்துவம், கதரபிவிர்த்தி, மது விலக்கு, தீண்டாமை ஒழித்தல் ஆகிய விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கதரணிதல், மது விலக்கு, மதச்சடங்குகளை குலப்பெரியோர்களைக் கொண்டே நடத்துதல் முதலிய தீர்மானங்கள் செய்யப்பட்டு மகாநாடு இனிது நடைபெற்றது.

---

ஒழியுங்கள்! அறிவும் அன்பும் உரிமையுமுள்ள மனிதர்களாக வாழுங்கள்! நம்மவர் உள் வெள்ளைமனம் உடையவர்களாக உணர்வழிந்திருப்பது அளவிலாவருத்தத்தைத் தருகின்றது. ஒருசிறு பார்ப்பனப் புரோகிதச் சிறுவனைக் கூடநம்மவரில் பெரியவர்பலரும் பணிந்துவணங்குதல் வெட்கந்தருவதன்றோ ஒருவிதத்தாலும்யோக்யதையற்ற வைதிகர் நம்மவர்களில் பெரியவர்களைப் பெயர் சொல்லி நாராயணா சுப்பிரமணியா என்று அழைப்பது நாணந்தருவதன்றோ? இவைகளையெல்லாம் நீங்கள் நன்கு சிந்தித்துச் சுயமரியாதை பெற்றுச் செழிப்புறுதல் வேண்டும். பிராமணரும் மனிதரே, தேவரல்ல என்பதை அறிதல் வேண்டும். சமமான முறையிலே மனிதநீர்மையுடன் வாழ்தல்வேண்டும். நேரமாய் விட்டமையால் இன்று இவ்வளவோடு நான் நிறுத்திக்கொள்ளுகிறேன். நமது நாட்டில் யாண்டும் ஸ்ரீமான்நாயக்கர் அவர்களை எல்லோரும் கௌரவப் படுத்தி அவர்களுடைய சீர்திருத்தக்கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்தல் வேண்டும். அன்பரும் அறிஞரும் அஞ்சா நெஞ்சத்துடன் முன்வரல்வேண்டும். இளைஞர்கள் முன்னணியில் நிற்றல்வேண்டும். பின்னர் ஸ்ரீமான் ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் நாயக்கருக்கும் தலைவருக்கும், சொற்பொழிவாளர்க்கும் வந்திருந்தவர்களுக்கும் சிறப்பாக விஜயஞ்செய்த கனவான்களுக்கும் வந்தனங்கூறினார். கூட்டம் 9-மணி அளவில் இனிது நிறைவெய்தியது. கடைசிவரையில் ஜனங்கள் இருந்து சபையைச் சிறப்பித்தனர். இக்கூட்டத்தால் காரைமகாநகரத்தில் பேருணர்ச்சி பொங்கிக்கொண்டிருக்கின்றது.

---

## ஆனைமலையில் உயர் திரு. பி. டி. ராஜன், பாரட்லா, எம் எல் ஸி அவர்கட்கு வரவேற்பு.

ஆனைமலை தொண்டமண்டல கொண்டைகட்டி வேளாள சமூகத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி திருவாளர்கள் பி. டி. ராஜன், எம். டி. சோமசுந்தர முதலியார், திரு. எ. ஆர். சிவானந்தம் முதலியவர்கள் 5-7-27 தேதியில் காலை கோவையிலிருந்து மோட்டாரில் புறப்பட்டுப்பகல் ஒரு மணிக்கு ஆனைமலை வந்து சேர்ந்தார்கள். முன்னர் யூனியன்சேர்மனும் விருந்த மிராசுதார், திரு. அசன்முகம்மது சாயபு அவர்கள் தன் இல்லத்தில் வரவேற்று கற்கண்டு சந்தன தாம்பூலம் கொடுக்கப் பெற்றபின் ஊர் வலமாக உடையகுளம் நாட்டாண்மைக்காரரும் நிலக்கிழவருமான திரு. எ. வி. மாணிக்க முதலியாரவர்கள் இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டார்கள். மேற்படியார் இல்லத்தில் பகல் உணவு உண்டு சிறிது இளைப்பாறியபின் மாலை 4-30 மணிக்கு மிராசுதார் திரு பி. சுந்தர முதலியாரவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி விழா நடைபெற்றது. இரவு 7-மணிக்கு திரு. எ. வி மாணிக்க முதலியாரவர்கள் இல்லத்தில் பொள்ளாச்சி ஸ்டேஷனரி சப்மாஜிஸ்திரேட் திரு, சொக்கலிங்க முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையில் ஷை சமூகத்தினரால் திரு. பி. டி. ராஜன் அவர்களுக்குஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்ட பின் சோளவந்தான் திரு சுப்பிரமணியமுதலியாரவர்கள் சமூக முன்னேற்றம் என்ற பொருள் பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினர். பார்ப்பனரல்லாதாரியக்க உண்மைத்தொண்டரும், ஜஸ்டிஸ், திராவிடன், குடியரசு பத்திரிகைகளின் ஏஜண்டுமான திரு. எ. ஆர் சிவானந்தம் அவர்கள், பெண்கல்வி என்ற பொருள்பற்றி கேட்போர் உளங்களிக்கச் சிறிது பேசியதும் திரு எ. ஆர் மல்லப்ப முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டுக் கூட்டம் இனிது நிறைவேறியது. என்று நமது விசேஷ நிருபர் அறிவிக்கிறார்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

இச் சங்கத்தின் பதினைந்து, பதினாறும் ஆண்டு விழா, பிரபவ ஆண்டு, ஆடித்திங்கள், (1927 ஜூலை 23, 24) ஆம் நாட்களாகிய சனி, ஞாயிறுகளில் நடைபெறும்.

பல்லாவரம் பொது நிலைக்கழக ஆசிரியர் உயர்திரு மறைமலையடிகள் (சுவாமி வேதாசலம் அவர்கள்) விழாவின் அவைத் தலைமை மேற்கொள்ள அருள் கூர்ந்திருக்கின்றார்.

அவ்வமயம் பல ஆங்கில, தமிழ் பண்டிதர்களும், ஆசிரியர்களும் தொண்டர் பெருமை, சிலப்பதிகாரம், பழய உரையாளர், திருவள்ளுவர், பரிமேலழகர், இளங்கோவடிகள், தமிழர் சமய வாழ்க்கைஆகிய விஷயங்களைக் குறித்துச்சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

தமிழன்பர்கள் விஜயம் செய்யும்படி ஷை சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் எ.எஸ். துரைசாமி பிள்ளையவர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்

## மைடான் டில்லி ஐக்கிய இந்திய சங்கம்.


இச் சங்கத்தின் 8 ஆவது கூட்டம் 29-6-27 மாலை மணி 7 மணிக்கு பிமத்தங்கியாந்தார்வள்ர் திரு வெ. பெரி- பெரிய கருப்பஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தார் அவைத்தலைவருக்கு மாலை சூட்டியபின் திரு. கரு. பெரி. பெரியையா அவர்கள் மூட நம்பிக்கையைப் பற்றியும் திரு. கரு. முமு. சோமசுந்தரன் திருக்குற்றால நகர இயற்கை அழகைப்பற்றியும், ஸ்ரீஜோலப்தால் இந்தியாவின் இடி முழக்கம் என்பதைப்பற்றியும் விஸ்தாரமாகவும் உத்சாகமாகவும் பிரசங்கமாரி பொழிந்தார்கள் முடிவாக அவைத்தலைவர் பேசுகையில் மக்களாகப்பிறந்தார் இயற்கைஇன்பந்துய்க்க வேண்டுவதவசியமென்றும், நாம கடலகடந்து அரும்பாடுபட்டுத்தேடும் திரவியத்தை நம் நாட்டில் உபநயனம், சீமந்தம், கலியாணம் வீடு கட்டுதல் ஆகிய காரணங்களைச்சொல்லி ஏமாற்றும் ஒரு வகுப்பாருக்குச்சிறிதும் உபயோகிக்கலாகாதென்றும், பெண் கல்வி உடனழைத்துவால், சமத்துவம், ஆகியவிஷயங்களையும் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டினார்கள், சுயமரியாதைப்பாடல்களும் கீதங்களும் பாடப்பெற்றபின்; அவைத்தலைவருக்கு மல்லிகைஆரம் அணிவிக்கப்பெற்று சிற்றுண்டி வழங்க, கூட்டம் 9-மணிக்கு இனிது நிறைவேறியது என்று கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

## பார்ப்பனிய மொழிந்த திதி.

அறந்தாங்கிமேலத்தெருவில் திரு. வி. நரசிம்மநாயுடு 19—7—27 ௳யில் தன் தகப்பனருக்கு திதி கொடுக்கவேண்டிய தினம் பார்ப்பன புரோகிதனை அழைக்காமல்தானே தன் தகப்பனாரை மனதில் நினைத்து, ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களை வாசித்து, கடவுளை வணங்கி, தன் பந்துக்களுடன் போஜனம் அருந்தினர் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## காஜாங் மலாய்நாடு
## பிராமணியமொழித்த திருமணம்

நிகழும் பிரபவ-௵ ஆனி-௴ 13-ந்தேதி (27-6-27) பகல் 11-32க்கு மேல் 1-30க்குள் காஜாங்சும்மனி ரோட்டு 16ங்கட்டடயிலிருக்கும் பிரபல கன்றாக்டரான கு. நாகப்படையாச்சி குமாரர் ஸ்ரீமான் நா. பழனியாண்டி படையாச்சிக்கும், ருசாவிலிருக்கும் ஸ்ரீமான் வீரமுத்து படையாச்சி குமாரத்தி சௌபாக்கியவதி வேலம்மாளுக்கும், சுயமரியாதைக் குருக்களைக்கொண்டு பிராமணியமொழிந்த திருமணம் இனிது நடந்தேறியது.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஆடி 9உ

## செங்கல்பட்டு ஜில்லா
# பார்ப்பனீய மகாநாடு.

நம் நாட்டு பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை இந்நாட்டில் நிலைநிறுத்த ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆயுதங்களான மதத்தின் பேரால் வேதம், சாஸ்திரம், புராணம், சடங்கு, கோயில், தீர்த்தம், யாத்திரை, மடாதிபதி, குருக்கள், புரோகிதன் என்பவை போன்ற புரட்டுகளைப்போலவே அரசியல் பெயரால் காங்கிரஸ், சுயராஜ்யம்' ஒற்றுமை, தேசீயம், உரிமை, அதிகாரத்தில் பங்கு, ஆங்கில பள்ளிக்கூடம், வக்கீல்வேலை, நியாயஸ்தலங்கள் முதலிய புரட்டுகளையும் உற்பத்தி செய்து கொண்டு அதன் மூலமாகவும் நம்மை ஏமாற்றி அடிமைப்படுத்தி, ஆதிக்கம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள் என்பதைப்பற்றி இதற்கு முன் பல தடவைகளில் எழுதிவந்திருக்கிறோம். நமது மக்களை ஏமாற்றுவதற்காக இந்த ஆயுதங்களை உபயோகப்படுத்தும்போது நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரான நமது சமூகத்தாரையே அடிமைகளாக்கி அவர்களைக்கொண்டே அவர்கள் மூலியமாகவே நம்மீது பிரயோகித்து வருகிறார்கள் என்பதைப் பற்றியும் பல தடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். அந்த விஷயங்களை வாசகர்கள் அனுபவத்தில் உணர்வதற்கு அடிக்கடி நிகழும் பல சம்பவங்களை எடுத்துக்காட்டியும் வந்திருக்கின்றோம். அப்பேர்ப்பட்ட அனுபவ நிகழ்ச்சிக்கு உதாரணத்தை மற்றுமொருமுறை எடுத்துக்காட்ட "செங்கல்பட்டு ஜில்லா அரசியல் மகாநாடு" என்கிற பித்தலாட்டத்தைப் பற்றி சில விபரங்களை குறிப்பிடலாமென்று இத்தலையங்கத்தை பார்ப்பனீய மகா நாடு என்கிற பெயர் கொண்ட தலையங்கத்தில் எழுதுகிறோம். இதைப்பற்றி ஏன் எழுதுகிறோமென்றால் இம்மாதிரியான அயோக்கியத்தனத்தினாலும், புரட்டுகளினாலும், பித்தலாட்டங்களினாலும், நமது மக்களை இந்தப் பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகவேமாற்றி, நம்மை முட்டாள்களாக்கி, நமக்கு மதவிஷயங்களில் குருவாகவும், ஆச்சாரியர்களாகவும், மடாதிபதிகளாகவும், லோககுருக்களாகவும், சடங்கு விஷயத்தில் நமக்கு தகப்பன்களாகவும், ஜாதி விஷயத்தில் நாம் பார்ப்பனர்களுக்கு வைப்பாட்டி மக்களாகவும், தெய்வங்கள் விஷயத்தில் நமக்கும் தெய்வத்திற்கும் மத்தியில் உள்ள துவிபாஷிகளாகவும், மோட்சசம்பிரதாய விஷயத்தில் அவர்கள் காலில் விழுவதாலும் அவர்கள் கால்கழுவின தண்ணீரை நாம் சாப்பிடுவதால் பாவம் மன்னிக்கப்பட்டு விடுவதாகவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதுடன் அரசியல் விஷயத்தில் நமக்குத் தலைவர்களாகவும், கல்வி விஷயத்தில் நமக்கு உபாத்தியாயர்களாகவும், உத்தியோகவிஷயத்தில் நமக்கு எஜமானர்களாகவும் இருக்க தக்கபடியாக அநேக அயோக்கியத்தனங்களைச்செய்து யோக்கியதையை சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதமேயில்லை.

இவ்வித அக்கிரமங்களை யொழிக்க நம் தலைவர்கள் பல நாளாக முயற்சித்து, அதற்கேற்ப இயக்கங்களை யேற்படுத்தி, அதற்காக உழைத்து வருவதும், அதை யொழிக்க பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரிலேயே சில இனத்துரோகிகளைப் பிடித்து பலவித கூலி கொடுத்து நமது இயக்கங்களை யொழிக்கவும், நமது இழிவும் குறையும் தீரவேலை செய்பவர்களை வையச் செய்வதும், நமது முன்னேற்றத்திற்கென்று நமது மக்கள் தனி மனிதர்களை நம்பி அவர்கள் மூலம் அவர்களுக்கேற்ற பிரசாரங்கள் செய்ய ஏற்படுத்தியிருக்கும் ஸ்தாபனங்களிலும் ஏமாற்றி வஞ்சகமாய் உள்நுழைந்துகொண்டு அவற்றை பாழ்படுத்தி அந்த ஸ்தாபனங்களை தங்களுக்கனுகூலமாய் திருப்பிக் கொண்டு அதன் மூலம் நமக்கே கேடாகும்படி செய்ய செய்வதுமே அவர்கள் தொழிலாய் இருப்பதையும் பார்த்து வருகிறோம். இத்தொழில்களில் ஒன்றாகவே செங்கல்பட்டு அரசியல் மகாநாடு நடைபெற்று முடிந்திருக்கிறது, ஷை மகாநாடு நடத்தியதின் கருத்து என்ன? அதன் வரவேற்பு அக்கிராசனர், மகாநாட்டுத்தலைவரென்பவர், இவர்கள்யார்? அவர்களுக்கு செலவுக்கு கொடுத்து வருபவர் யார்? அவர்கள் யோக்கியதை யென்ன? அவர்கள் பேசிய பேச்சின் தத்துவம் என்ன? அவைகளை பிரேரேபணை செய்த, ஆமோதித்த ஆட்கள் யார்? என்கிற விபரங்களை ஒரு நடுநிலைமையிலுள்ள மனிதன் சற்று கவனமாய் யோசித்துப் பார்ப்பானானாலும் கூட விளங்காமல் போகாது. அதன் உபசாரணைத் தலைவரென்பவர் யார்? அவர் எப்பொழுது பொது வாழ்வில் வந்தவர்? அவரது கொள்கை என்ன? அரசியலில் மகாத்மா காந்தியடிகள் தலையிட்டு உலக மக்களையே கலக்கி தேசபக்தர்களை கூவி அழைத்த காலத்தில் இவரெங்கிருந்தார்? ஆகிய சங்கதிகள் ஒன்றும் யாரும் அறியமுடியாதபடி இருக்கிறது, இவரது வரவேற்பு அக்கிராசனப் பிரசங்கம் பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டு உழைத்து வரும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை யொழித்த பார்ப்பனர்கள் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் கிளிப்பிள்ளையின் சத்தமாய் இருக்கிறது. அச்சத்தத்தின் தத்துவங்கள் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தைப்பற்றி மக்களுக்குத் திரித்துக்கூறி, பார்ப்பனரல்லாதார்களை வைது, பார்ப்பனர்களை சரணாகதி அடைய பார்ப்பனரல்லாதார் தத்துவத்தையும், பாமர மக்களையும் பலிகொடுக்கப் பிரயத்தனப்படுவதாயும், பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவதாயுமிருக்கிறது. இதற்கு உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுவோம்.

"சமயத்திற்கு ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்து தலைவராகப்பார்க்கும் ஸ்ரீவரதராஜுலுநாயுடுவும், ஜாதியுணர்ச்சியும் பொறாமையும் கொண்டு சுயமதிப்பை விட்டு பனகால் ராஜாவைத் தலைவர் என்று மானமில்லாமல் சொன்ன ஒத்துழையா ஸ்ரீ திரு.வி. கலியாணசுந்தர முதலியாரும், பார்ப்பனரல்லாதாரையும் வாய்கூசாமல் திட்டி வரும் ஸ்ரீ ராமசாமி நாயக்கரும், ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், பார்ப்பனரல்லாதார் சங்கத்தில் இருக்கும் பொழுது, பார்ப்பனர்களை மாத்திரம் நாம் எப்படி ஆதரிக்கலாம்?"
என்றுபேசி இருக்கிறார்.

"உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் நமக்காகவே அர்ப்பணம் செய்து, தேசதுரோகிகளின் வசவுகளை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் உழைத்துவரும் நம் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச ஐயங்காருடையவும், மற்ற பார்ப்பன தேசபக்தர்களுடையவும் தேசசேவை நமக்கு வேண்டாமென்று எந்த தேசபக்தர் சொல்லக்கூடும்?"

என்றும் பேசி இருக்கிறார். இதிலிருந்தே இவருடைய யோக்கியதையை அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர், ஷண்முகம் செட்டியார், பனகால் ராஜா இந்த ஐவர்களை விட ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் எந்த விதத்தில் மேலானவர் என்று இந்த வரவேற்பு தலைவர் ஸ்ரீ செட்டியார் கருதுகிறார் என்பதற்கு காரணம் சொல்லி இருந்தால் அது யோக்கியமாய் இருந்திருக்கும். ஸ்ரீ சீனிவாச ஐயங்கார் தேசத்தைப் பாழாக்கும் வக்கீல் பிழைப்புக்காரர், சர்க்காருக்கு நல்ல பிள்ளையாயிருந்து பட்டம் பதவி பெற்றவர், பெரிய உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு, காந்தியடிகளின் ஒத்துழையாத்திட்டம் சட்டவிரோதமானது என்று சொன்னார். மகாத்மா காந்தியை "மகாத்மா" என்று கூறுவது தப்பு என்று சொன்னார். காந்திக்கு மூளை இல்லை என்று சொன்னார். தீண்டாமை, மதுவிலக்கு, கதர், முதலியவைகள் காங்கிரஸில் இருக்கக் கூடாது என்று சொன்னவர்?

"ராமசாமிநாயக்கர், கலியாணசுந்தரமுதலியார் ஆகியவர்களை காங்கிரஸை விட்டு வெளியாக்கவேண்டும்" என்று சொன்னவர். "ராமசாமி நாயக்கரையும் ஆரியாவையும் இன்னமும் ஏன் சர்க்கார் பிடித்து ஜெயிலில் அடைக்காமல் வெளியில் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள்" என்று கேட்டவர்.

"அட்வகேட் ஜெனரலாவது இவர்களை ஜெயிலில் அடைக்க யோசனை சொல்லக் கூடாதா" என்று சொன்னவர்.

இப்படிபேசி இருப்பதோடல்லாமல் ஒத்துழையாமையை ஒழிப்பதற்கு கூலி சேர்த்து ஒழித்தவர். அன்னக்காவடிகளுக்கு பணம்கொடுத்து பார்ப்பனரல்லாதாரை வையும்படி சொல்லி வருகிறவர். இன்னமும் மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் பதினையாயிரம் என்று வக்கீல் உத்தியோகத்தில் சம்பாதித்துக்கொண்டு இருப்பவர் நிமிஷத்திற்கு நிமிஷம் தவறாது நூறு பொய் பேசுகிறவர் என்ற பெயரை வாங்கியவர். இப்படி இருக்க, ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் எந்த விதத்தில் மற்றவர்களைவிட யோக்யதாம்சம் பொருந்தியவர் என்பதையும், எந்த விதத்தில் தேசத்திற்கு, உடல், பொருள், ஆவி, இம் மூன்றையும் தத்தம் செய்தவர் என்பதையும், ஏதாவது நஷ்டப்பட்டாரா? கஷ்டப்பட்டாரா? சிறைக்கு சென்றாரா? வக்கீல் வேலையைவிட்டாரா? என்பவைகளையும் எழுதி இருந்தால் நன்றாயிருக்கும்.

மற்றபடி மகா நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ஒத்தகாசு கந்தசாமி செட்டியாரைப்பற்றி நாம் ஒன்றும் புதிதாய் சொல்ல வேண்டியதில்லை அவர் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இருந்தவர். அக்கக்ஷியார் இவருக்கு செலவுக்கு பணம் கொடுக்காததால், பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டதாக அதாவது 'கூலிக்கு மாரடிக்கிறவர்' என்று பார்ப்பனரல்லாதார் கட்சித் தலைவரால் சொல்லப்பட்டு கோர்ட்டிலும் விவகாரம் நடந்தது. பெரும்பாலும் விஷயம் நம்பும்படி யேற்பட்டு இவருடைய யோக்கியதை "ஒரு காசுக்கும் சின்ன நாணயம்தான் பெறும்" என்று தீர்ப்பும் பெற்றவர். இந்த யோக்கியர் ஒரு மகா நாட்டுக்கு தலைவர் என்கிற பெயரை பார்ப்பனர்கள் தயவால் பெற்று.

"ஜஸ்டிஸ் கட்சியானது ஒற்றுமையைப் பாழாக்கி வருகிறது" என்றும் "பார்ப்பனரல்லாதார் பெயர்" பொருளற்றதென்றும் "ஒருவரை மாத்திரம் துவேஷித்து பேசுவது சரியல்ல" வென்றும் இனனும பலவாறாக பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கி பேசி இருக்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, என்கிற பெயர் சொல்லிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரை வைது கொண்டு பெருமைசம்பாதித்துக் கொண்டும் கூலி வாங்கிக் கொண்டும் வாழ்கிறவர்களில் இவரும் ஒருவர் என்பதை இவர் கதை அறிந்தவர்கள் எல்லோரும் நன்றாய்த் தெரிந்தே இருப்பார்கள்.

"ஜஸ்டிஸ் கட்சி" என்பதாக ஒரு தனிக் கட்சி எங்கேயாவது இருக்கிறதா? அதற்கு கொள்கையுண்டா? அதற்கு சந்தாஉண்டா? என்பதை, அதை வையும் இந்த யோக்கியர்கள் நஜாச் செய்தால் நன்றாய் இருக்கும். "ஜஸ்டிஸ்" என்பது ஒரு பத்திரிகையினுடைய பெயரே யல்லாமல் ஒரு கட்சியின் பெயரல்ல. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பதாக ஒரு சங்கம் இருக்கிறது. அதன் கொள்கையை ஒப்புக் கொள்ளுகிறவர்கள் ஒரு கட்சியாக இருக்கிறார்களே அல்லாமல் வேறில்லை. இந்த ஸ்ரீமான் ஒத்தகாசு செட்டியார் இருக்கும் போது ஏற்பட்டிருந்த கொள்கைகள் இன்னமும் அக்கட்சியில் மாறாமல் இருக்கின்றன. அவ்வப்போது அக்கொள்கைகளுக்கு ஏற்ற திட்டங்கள் ஏற்படுத்தி நடத்தி வரப்படுகிறது. மற்க. "பார்ப்பனரல்லாதார்" பெயர் பொருளற்றது என்று சொல்லுகிறது. இவரே அக்கட்சியில் இருந்து வைத்து விட்டு வந்த பெயர்; இந்த பெயர் இவருக்கு பிடிக்கவில்லை என்று சொல்வதானது ஸ்ரீமான் சீனிவாச ஐயங்காரின் பணத்தின்மகிமையே அல்லாமல் வேறல்ல இவரைப்போலவே இன்னும் சில பார்ப்பன அடிமைகளும்பார்ப்பனருக்கு நல்ல பிள்ளை ஆகவேண்டுமென்கிற பேர்வழிகளும் இதை சொல்லிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஒரு கூட்டத்தார் நமக்கு விரோதி, நமது சுயமரியாதையை கெடுத்தவர்கள், என்று நாம் உறுதியாக கண்டு விட்டோமானால் நமது சுயமரியாதை இயக்கத்திற்கு அவர்கள் சகவாசமே கூடாது என்று தீர்மானித்து விட்டோமானால், அம்மாதிரி இயக்கத்திற்கு என்ன பெயர் வைப்பதென்று அவரவர் ஆராய்ந்து சொன்னால் யோக்கியமானதாக இருக்கும். அந்த இயக்கத்தில் அங்கத்தினர்களாக சேர்ந்துகொள்ள உரிமை உள்ளவர்கள் அநேக பெயரையுடையவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நாம் அந்த பெயரை உபயோகப் படுத்துவதானால் அது நமது சுயமரியாதைக்கு பங்கமானதாக இருக்கிறது, உதாரணமாக "சூத்திரன்" என்று வைத்துக்கொள்வதா? அல்லது பஞ்சமன் என்று வைத்துக் கொள்வதா? என்று சுயமரியாதையோடு யோசித்துப்பார்த்தால் அதன் யோக்யதை விளங்காமல் போகாது, தெரிந்து பேசுகிறவர்களுக்கு யாரால் பதில் சொல்ல முடியும். இதை மற்றொரு சமயம் விவரிப்போம்.

தவிர பார்ப்பனர்களைநாம் பகிஷ்கரிப்பதாய்சொல்லுகிறார், நாம் அவர்களை பகிஷ்கரிக்கின்றோமா? அவர்கள் நம்மை பகிஷ்கரித்து இருக்கின்றார்களா? என்ற விபரம்கடுகளவு புத்திபுள்ளவனுக்குந்தெரியாமல் போகாது. பார்ப்பனர் பகிஷ்காரத்தால் நமக்கு யேற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்கிக்கொள்ள நாம் முயற்சிக்கிறோமே அல்லாமல் நாம் அவர்களை பகிஷ்கரிக்கவில்லை. அவனுக்குள்ளதை அவன் எடுத்துக்கொள்வதிலும் நாமாக கொடுப்பதிலும் நமக்கு எப்போதும் ஆக்ஷேபனை இல்லை. ஆதலால் நாம் அவர்களை பகிஷ்கரிககிறோம என்று சொல்வதும் ஒழிக்கப் பார்க்கிறோம் என்று சொல்வதும் துவேஷம் கொள்ளுகிறோம் என்று சொல்வதும், புரட்டுப் பார்பனர்களுக்கு தாங்கள் மாத்திரம் நல்ல பிள்ளைகளாகி பொறுக்கித்தின்பதற்கும் ஏமாற்றுவதற்கும் போடும் வேஷமே யல்லாமல் வேறல்ல. ஆனால் நமது இயக்கத்திற்கு ஏன் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று கேட்கிறார்கள். அப்படி கேட்பது அறிவில்லாமையும், அநுபவமில்லாமையும் ஆகும். ஏனெனில் பார்ப்பனன் நம்மை செய்த செய்துகொண்டிருக்கும் கொடுமையிலிருந்தும். இழிவிலிருந்தும் மீளவே நாம் இவ்வியக்கத்தை ஆரம்பித்துக்கொண்டு இருக்கிறோம். அவ்வித இயக்கத்தில் அவனை கொண்டுவந்து உள்ளே நுழைத்துக்கொண்டால் அந்த இயக்கம் வாழுமா? அவர்களுடைய சூழ்ச்சியும்,தந்திரமும், நமக்குள் கலகம் செய்வித்து நமமை பிரித்து வைக்கும் விஷமத்தனமும், நமக்குத் தெரியாதா? அவர்களை சேர்த்த எந்த இயக்கம் உலகத்தில் யோக்கியமாய் நடந்தது அல்லது நடைபெறுகிறது?

மகாத்மா காந்தியின் அற்புதமான இயக்கம் அழிந்து, அவரது புனிதமான தத்துவங்கள் பயன்படாமல் அவரையும் ஒரு சங்காரச்சாரியார் போல ஆக்கிவிட்டது. பார்ப்பனர்களை அவரது இயக்கத்தில் சேர்த்ததினால் அல்லவா? தனவைசிய நாட்டில் பார்ப்பனீயத்தை யொழித்து, மக்களுக்கு சமத்துவமும் சுதந்திரமும் அளித்து, மூடவழக்கத்தை யொழித்து, சுயமரியாதையை உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு பதினாயிரக்கணக்கானரூபாய்களைசெலவுசெய்து பல அறிஞர்கள் கூடி ஆரம்பித்த ஒரு பத்திரிகை இன்றயத்தினம் சுய மரியாதைப் பிரசாரம் செய்வது நாட்டிற்கு கெடுதி என்றதாக எழுதிக்கொண்டு சுயமரியாதைப் பிரசாரத்திற்கு எதிர் பிரசாரம் செய்வதற்கு காரணம் என்ன? ஒரு பார்ப்பனனை அந்த பத்திரிகை ஆபிஸில் நுழையவிட்டதினால் அல்லவா? இப்பேர்ப்பட்ட சொந்த உறுதி உள்ள மக்களும் தத்துவங்களும் பார்ப்பனர்களை உள்ளே சேர்த்ததின் பலனாக பாழ்பட நேரிடுகிறது என்றால் மற்ற சாதாரண கூட்டங்களில் புக விட்டால் என்ன கெதியாகுமென்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. விதண்டாவாத முறையில் வக்கீல் தத்துவம் பேசுவதின் மூலம் வாயாடிகள் பாமர மக்களை எந்த கொள்கைக்கு வேண்டுமானாலும் இழுத்து விடலாம் வாதத்தில் பாமரமக்களை வென்றுவிடலாம். இவைகளாலேயே சரிக்கண்ட நியாயமேற்பட்டுவிடுமா? பாமரமக்களுக்கு பகுத்தறிவு உணர்ச்சி வரும் வரை இம்மாதிரி ஒரு கூட்டத்தார் யேமாற்றி வயிறு வளர்த்துக்கொண்டு பெருமையும், கீர்த்தியும் சமபாதிக்கலாமே ஒழிய உலகத்திற்கு இவர்களால் ஒரு பயனும் யேற்படாததோடு நாளுக்குநாள் பாழ்பட்டுக்கொண்டே வரும். எனவே செங்கற்பட்டு ஜில்லா மகாநாடு என்னும் பார்ப்பனீய மகாநாட்டில் நடைபெற்ற நடவடிக்கைகளும அதில் சம்பந்தப்பட்டவர்களும் பார்ப்பனர்களால் ஏமாந்தவர்களும பார்ப்பனர்களின் தயவு பெற்று வாழ்பவர்களுமானவர்களின்நடவடிக்கையே யல்லாமல் இது ஒரு பொதுத்தொண்டு அல்லவென்று சொல்வதோடு இம்மாதிரி சூழ்ச்சிகளைக்கண்டு மக்கள் யேமாறும் காலம் மலையேறிப் போய்விட்டது என்றும் சொல்வோம மற்றபடி அதன் தீர்மானங்களைப் பற்றி பின்பு ஆராய்வோம்.

## சூழ்ச்சி வேண்டாம்.

கோயமுத்தூரில் கூடிய மகாநாட்டைப் பற்றித் தப்பபிப்ராயமுறாத பத்திரிகையில்லை. கருத்துரையாத தலைவர்களுமில்லை. கோவை மகாநாட்டுத் தீர்மானங்கள் இந்தியாவிலுள்ள அரசியல் நெறிபற்றியுள்ளாரனைவரையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டன. அந்நிய நாட்டாரையும் இத்தீர்மானங்களின் அதிர்ச்சி திரும்பிநோக்கச் செய்து விட்டதென்னலாம். அரசாங்கத்தினரும் மூக்கில் விரல்வைக்க வேண்டியவராயினர். சென்னை மந்திரிசபை காற்றில் ஆடுகிறது.

சுயராஜ்யக்கட்சியார்மந்திரிசபையைவொழிக்கும் தீர்மானத்தில் ஜஸ்டிஸ் கட்சியுடன் ஒத்துழைப்பார்கள் என்று திரு. எஸ். சீனிவாசய்யங்கார் கூறியிருக்கிறார். காங்கிரசில் சேரவருபவர்களை வரவேற்கிறேன் என்றும் கூறுகிறார். திரு. ஐயங்கார் கூறியுள்ள வார்த்தைகளிலிருந்து ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேரல் மகிழ்ச்சி தரத்தக்கதேயாகும். ஆனால் காரிய நிர்வாகக்கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியார் இடம் பெறாதவாறு சூழ்ச்சிகள் நிகழ்த்தப்படுமோ என்ற ஐயம் எழுகின்றது. வெளிக்கு எல்லாம் சந்தோஷங்கூறிவிட்டு உள்ளே சூழ்ச்சிசெய்ய முயலுவாராயின் சென்னை காங்கிரஸ் பிராமணத்தலைவரது கொடிய நிலை உலகிற்கு விளங்கிவிடும். ஜஸ்டிஸ் கட்சியார் தங்கொள்கையை உள்ளே வைத்துக்கொண்டு கேடு சூழ வருகின்றாரென்று சில பார்ப்பனர் கூற ஆரம்பித்திருக்கின்றனர். இப்போலி ஐயத்தைக்கொண்டு அந்தரங்கத்தில் உள்ளேவிட மறுக்கக்கூடுமோ என்ற ஐயம் சாதாரணமாக உண்டாகக் கூடியதேயன்றோ?

ஜஸ்டிஸ் கட்சியார் பதவி வேட்டைக்காரர், தேசத்துரோகிகள் என்றெல்லாம் நாட்டில் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வாய்திறந்து கூற முடியாதபடி கோவை மகாநாட்டுத் தீர்மானங்கள் தலைதூக்கி நிற்கின்றன "இரட்டை யாட்சி முறியுமட்டும் பதவி ஏற்பதில்லை" எனுந் தீர்மானம் பகிரங்கமாகச் செய்யப்பட்டிருந்துங் கூட குயுக்தி வாதம் பேச சில அரசியல் பார்ப்பனர்முயல்வாரானால் அது அவர்களது சுயநல நோக்கமும், பிராமணரல்லாதாரிடம் அவர்கள் கொண்டிருக்கும் துவேஷ புத்தியுமே காரணங்களாகுமென்பதில் ஆக்ஷேபமென்னை?

தமிழ் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியாரால் பிராமணரல்லாதாருக்கு விளைந்திருக்கும் நன்மைகள் அளப்பில. மிருகமாக, இன்னும் அதற்குங் கீழாக எண்ணி நடத்திய பார்ப்பனர் கொட்டம் ஒருவாறு அடங்கி வருகிற தென்பது கண்கூடு. இழிந்தவர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டு பார்ப்பனர் காலில் விழுந்து அடிமை பூண்டு கிடந்த பிராமணரல்லாதார் பலர் தாங்களும் மனிதர்காம் பிராமணரும் நம்மைப் போன்ற மனிதர்தாம். தேவரன்றுஎன்றுகருதுவாராயினர் பிராமணரல்லாதாருக்கு மனிதவுணர்வை நல்கியிருப்பது ஜஸ்டிஸ் கட்சியின் முயற்சியேயாகும். ஆனால் இதனுடைய பிற்போக்கான அரசியற் கொள்கையைத் தனைப்பற்றிக் குறை கூறும் பகுதியால் பிராமணர் பிராமணரல்லாதாருணர்ச்சியை அழிக்க முயல்கின்றனர். பிராமணரல்லாதாரின் அறிவியக்கம் வர வர வளர்ந்தேறித் தேய்வதாக இல்லை. பார்ப்பனத் துவேஷத்தைக் கிளப்பி விட்டதாகக் கூறப்படுவதற்குக் காரணமேயில்லை. தமிழ் நாட்டில் பார்ப்பன துவேஷம் பொது ஜனங்கட்கிருந்தால் அதுபார்ப்பனராலேயேயுண்டானதாகும், அவர்களின் செயல்களினாலேயே அது நாளொரு மேனியாக வளர்ந்திருத்தல் வேண்டும். துவேஷத்திற்கிடமில்லாத ஒருவர் மேல், கட்டுமானத்தால் ஏற்படுந் துவேஷம் எத்தனை ஆண்டுகள் வரை நிலைக்க முடியும்? பொய்ம்மை வளருமோ? பார்ப்பனர் செய்யும் அநியாயம் ஜனங்கட்கு உணர்த்தப்படுகிறது, உண்மைக்கண் திறக்கப்படுகிறது. இதனைப் பிராமணத்துவேஷம் என்றுகூறி அழிக்க முற்படுவது மூடத்தனமேயன்றி வேறன்று. எத்தனைபேர் கூடி எப்படி முயன்றாலும் பிராமணரும் அல்லாதாரும் "ஒற்றுமை" என்ற முடிவு வரும் வரை பிராமணரல்லாதார் இயக்கம் சோர்ந்தழியாததாகவே இருக்கும்; கட்டாயம் இருத்தல் வேண்டும். "தேசத் துரோகிகள்!" என்று கூறி பிராமணரல்லாதாரியக்கத்தை யொழிக்க முன்னர் எப்படி வழி பார்த்தார்களோ அப்படியே பிராமணத் துவேஷிகள் காங்கிரசுக்கு வருகிறார்கள் என்று கூறத்துவக்குகின்றனர். எந்த இடத்திலும் தங்கள் அளவில் பிராமணர் அடங்கி நிற்றல்வேண்டுமென்பதேபிராமணரல்லாதாரின் நோக்கமாகும். முப்பத்திரண்டில் ஒரு பங்குள்ள பிராமணர் மற்றவரை அடக்கியாளவெதென்று நினைக்கிறவரை ஒற்றுமை நிலவப்போவதில்லையென்பது உறுதி. கோவை மகாநாட்டுத் தீர்மானத்தின்படி வரும் அன்பர்கட்கு காங்கிரஸ் வாசல் எவ்வித சூழ்ச்சியுமின்றித் திறந்திருக்கவேண்டும். பார்ப்பனர் சூழ்ச்சியைக் கட்டித் தூரஎறிந்து விடுவார்களானால் சென்னை மாகாண அரசியல் புத்துயிர் பெற்று விளங்குமென்பதில் ஐயமில்லை. (குமரன்)

மதுரை:--- நகர பரிபாலன சபையைச் சார்ந்த "பிரசவ சிசு பரிபாலனசபை"யின் சூப்ரின்டென்டான டாக்டர் ஸ்ரீமதி அன்னாதாமஸ் அம்மாளவர்கள் "வித்பாரம்ப வயதுக்கு முன் (1½-7வயது) குழந்தைகளுக்கு வரும் பிணிகளும் பரிகாரங்களும்" என்னும் விஷயத்தைப்பற்றி எழுதின அகில இந்தியப்போட்டி வியாஸத்திற்காக முதல் பரிசாக ஒரு பொற்பதக்கம் அளிக்கப்பட்டதாக "அ. இ. லேடி செம்ஸ்போர்ட் சிசுபரிபாலன சபை"யின் காரியதரிசி சிம்லாவிலிருந்து தெரிவிப்பதாகவும், டை டாக்டர் அன்னாதாமஸ் அம்மாளவர்கள் பிரசவ சிசு பரிபாலன விஷயங்களை விசேஷமாக ஆராய்ச்சி செய்து அதற்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் மாதாந்தரப் பத்திரிகை யொன்று ஸ்ரீ லேடி வில்லிங்டன் அவர்களாதரவில் கொஞ்சகாலம் நடத்திவந்ததாகவும், டை அம்மையாரின் பர்த்தா இவ்வருஷ "தேசிய ஆரோக்யமும் குழந்தைகள் வாழ்வும்" என்பதைப்பற்றி எழுதிய முதல்தரமான வியாசத்திற்காக "லேடிவில்லிங்டன் பொற் பதக்கம்" அளிக்கப்பட்டாரென்றும் ஸ்ரீமான் ஜார்ஜ். பி தாமஸ் மதுரையிலிருந்து நமக்கு எழுதுகிறார்.

அநுதாபம்:--- "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு"ப்பத்திரிகைகளின் கோயமுத்தூர் ஏஜண்ட் திரு. A R சிவானந்தம் அவர்களின் தாயார் ஸ்ரீ அகிலாண்டம்மாள் சென்ற ஆனித்திங்கள் 30-தேதி இரவு 4-30 மணிக்கு கரூரில் எல்லா வல்ல இறைவனது திருவடியை யடைந்ததாகக் கேள்விப்பட்டு விசனிப்பதுடன், அவரது குடும்பத்தாருக்கும் நமது அநுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.


" அதிவெகு ஆச்சரியம்"

ஆரூடம்:—தகுந்த விடைகள்எதிர்காலபலன் கேள்விகள் 6-க்கு ரூ ஒன்று, மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு வேறு சுப்பிரமணிய கவசததால் சகல காரியங்களும் அனுகூலம். சகல வசியங்களும் ஏற்படும். தரித்திரம் உண்டாகாது. கவசசதது ஒன்றுக்கு ரூ. 2, தபால் செலவு வேறு, ரச விக்கிரகங்களும ரகவாரியாக முடித்து அனுப்பப்படும். இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதித்தெரிந்துகொள்ளவும். அன்னிய நாட்டுப்பிரதேசவாசிகள் முன் பணம் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமணிய உபாசி,
பழனி. Palani P. O. (S. I.)

13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது.

# "ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது.
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனாம்.
விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## பிஜி கடிதம்.

லட்டோகாவிலிருந்து ஸ்ரீமான் இ. கோவிந்தராஜு பிள்ளை எழுதுகிறார்.

மகா-ா-ா-ஸ்ரீ சுதேசமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு எழுதிக்கொண்டது.

தங்களுடைய 14—2—27-தேதி பத்திரிகையில் ஸம்மத வயது என்ற தலைபங்கம் போட்டு எழுதிய வியாசத்தைப் படித்துப் பார்த்தேன். தாங்கள் 14 வயதுக்குகூட ஆதரவு கொடுக்க இஷ்டம் இல்லாமல் இருக்கிறீர்கள். ஆனால் 14 வயதுக்குள் கலியாணமாவது கெட்ட விஷயம் என்று கூசாமல் ராமாயணம் எழுதுகிறீர்கள். ஆனால் அதை ஆதரிக்கப்பயப்படுகிறீர்கள். தெனிந்தியாவில் பிரபலம்வாய்ந்த "சுதேசமித்திரன்", இந்த முக்கிய விஷயத்தில்வழவழப்புகாட்டினால் மற்றபேப்பர்கள் என்ன செய்யும். இத்தியாதிகாரணங்களுக்காகவே, சில சமயங்களில் "குடி அரசு" பத்திரிகை, பிராமணப்பத்திரிகைகள் தகுந்த சமயங்களில் தேசத்துக்கு ஒத்துழைக்க மறுக்கின்றன என்று எழுதுகிறது. இதில் என்ன சந்தேகம். சர்க்கார் தலையிடக்கூடாது, சமூகமே காலாவட்டத்தில் ஸம்மதவயதை சரி செய்துகொள்ளவேண்டும் என்று எழுதுகிறீர்கள் வாஸ்தவமே, இதுவரையில் நமது இந்து சமூகம் என்ன சீர்திருத்தம் செய்து இருக்கிறது. தயவு செய்து தாங்கள் சொல்லவேண்டும். ஆனால் அடியில் கண்ட கெட்ட வழக்கங்கள் மாத்திரம் நமது சமூகத்தில் என்றைக்கும் மாறுதல் கடவுளால் செய்யப்பட்ட வேதம் என்று சொல்லிக் கொண்டு நம்முடைய இந்திய தேசத்து ஜனங்கள் யாவரும் அடிமையாய் இருக்கும்படி, இந்து மகமோ அல்லது புரோகிதர்களோ செய்து விட்டார்கள். இந்த விஷயங்கள் யாவும் தங்களுக்கு என்னைவிட 100 மடங்கு அதிகம் தெரிந்து இருந்தும், ஸம்மத வயது விஷயத்தில் வழவழப்பு காட்டிவிட்டீர்கள், சர்க்கார் தலையிடக் கூடாது சமூகமே எல்லாம் செய்யவேண்டும் என்கிறீர்கள் எனக்கு தெரிந்தவரையில் பெரிய பெரிய தலைவர்கள், பொதுக் கூட்டங்களில் வாய் கூசாமல் இளம் கைம்பெண்களுக்கு மறு கலியாணம் அவசியம் செய்து வேண்டும், அது வேண்டும், இது வேண்டும், என்று கூடி இருக்கும் ஜனங்கள் மெச்சும்படி பேசுவார்கள். கூட்டம் தீர்ந்து வீட்டுக்குப் போனாலோ எல்லாம் மறந்து விடுவார்கள். யாராவது என்ன அப்பா அன்று பொதுக்கூட்டத்தில் 16-வயதுக்கு மேல் பெண்ணுக்கும், 21-வயதுக்கு மேல் பிள்ளைக்கும் கலியாணம் செய்து வைக்கவேண்டும் என்று அன்று தினம் திரளான கூட்டத்தில் சொன்னீர்களே, நீங்கள் உங்கள் குமாரத்திக்கு 8-வயதில் கலியாணம் செய்து வைக்கிறீர்களே நல்லதா என்று கேட்டால், கேட்டவருக்கு தமிழில் பதில் சொல்லாமல் அன்னிய பாஷையில் கோபத்துடன் (I am willing but my people do not agree what can I do?) என்று உளறுகிறார்கள் இதுதான்நமது சமூகச்சீர்திருத்தமே போலும். ஸம்மதவயது விஷயமாக கைவல்யசாமியார் "குடி அரசு" பத்திரிகையில்பெப்ரவரிமாதம் எழுதி இருக்கிறார். அதை தயவு செய்து படித்துப்பார்க்கவும். நமது தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் பெண்களுக்கு 18-வயதும், பிள்ளைக்கு 23 வயதாகவும் கலியாணவயதுச் சட்டம் செய்யவேண்டும். இது நமது ஊருக்கு தகாது, வெள்ளைக்காரருக்குத் தான் தகும் என்று பதில் சொல்லலாம். வெள்ளைக்காரர் மாதிரி நாம் உடுத்த வில்லையா, அவர்கள் செய்கிறமாதிரி நாமும்சில சமயங்களில் நடந்துவரவில்லையா. அப்படி இருக்க இது ஏன் நமது ஊருக்கு ஒத்துவராது. நான் வெள்ளைக்காரர் மாதிரி நடக்கும்படி நான் ஒரு போதும் சொல்ல மாட்டேன். எது நமது சமூகத்துக்கும், வாழ்நாளுக்கும், நமது தேசத்துக்கும் எது நல்லது என்று தோன்றுகிறதோ அதே மாதிரி நடக்கிறதற்கு ஏன் ஆட்சேபனை செய்யவேண்டும்.

"பறையனை நாம் தொடக்கூடாது, தீட்டு வந்து ஒட்டிக்கொள்ளும். உடனே தலை முழுகவேண்டும். அதே பறையன் ஒரு கலெக்டராக உத்தியோகத்துக்கு வந்து விட்டால் இரண்டு கையையும் எடுத்து நமஸ்காரம் செய்து விட்டு அவனுடன் கை குலுக்கலாம். அது தீட்டல்ல" என்பது தான் இந்து சமூகமாய் இருக்கிறது.

"ஒரு பறையன்" "ஒரு சக்கிலி" நமது இந்துமதத்தைச் சேர்ந்தவன். ஆழ்ந்து பார்த்தால் நமது சொந்த அண்ணன் தம்பியாக பாவிக்கவேண்டும். அப்பேர்ப்பட்டவன் ஒரு பிராமண அக்கிராரம் வழியாகப் போனால் உடனே தீட்டு வந்து ஒட்டிக்கொள்ளும், அதே தெருவில் ஒரு அன்னிய மதஸ்தன், கிறிஸ்தவன், அல்லது மகமதியன், யார் போனாலும் தீட்டுவராது. இது என்ன அநியாயம், இப்பேர்பட்ட விஷயம் வரும்போது, தாங்கள் ஒன்றுமே உங்கள் பத்திரிகையில் எழுதுவதே கிடையாது. சர்க்கார் இதில் கவலை செலுத்த ஆரம்பித்தால் "இந்து சமூக வாழ்வில் கவர்ன்மெண்டார் புகக் காரணம் இருக்கக்கூடாது" என்று எழுதிவிடுகிறீர்கள், என்னுடைய அபிப்பிராயம் சர்க்கார் புகாமல் ஒன்றுமே நடைபெறாது நமது சமூகமே வேதம், புராணம், புரோகிதர் என்பவைகளை நம்பியிருக்கிறது. ஆகையால் நமது சமூகம் சீர்திருத்தம் அடைவது குதிரைக்கு கொம்பு முளைப்பதுபோல் ஆகும். துருக்கியில் இப்போது எப்படி இருக்கிறது, அந்த தேசத்து பெண்கள் 50 வருஷத்துக்கு முந்தி எப்படி இருந்தார்கள். இப்போது என்ன அந்தஸ்தில் இருக்கிறார்கள். இந்தமாதிரி அநேக திருஷ்டாந்தங்கள் நான் சொல்லக்கூடும். தங்களுக்கும் இவைகள்யாவும் என்னைவிடபத்து மடங்கு ஜாஸ்தியாகவும் தெரியும். ஆனால் தங்களுடைய சமூகத்தாருக்கு பயந்துகொண்டு ஒன்றுமே எழுதமாட்டீர்கள். சமயம் வரும்போதும் வழவழப்பாக எழுதியும் வருகிறீர்கள், ஆதிகாலம் முதல் நமது தேசத்தில் எவ்வளவோ தர்ம ஸ்தாபனங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இவைகளில் தர்ம சொத்துக்கள் துர்வினியோகங்கள் ஆகிக் கொண்டு வருகிறது, தவிர பிராமணருக்குத்தான் எல்லா சவுகரியங்களும் இந்த தர்மஸ்தாபனங்கள் செய்து வருகிறது. இது நியாயமாகுமா? பொது நன்மைக்கு பாடுபடுபவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற தங்களைப்போல் உள்ளவர்கள் தங்கள் சமூகத்திற்கு பயப்படாமலும் சுயநலமில்லாமலும் எல்லாம் பொதுவாக நடக்கும்படியும் எல்லா சமூகமும் முன்னுக்கு வரும்படிக்கும் அல்லவோ பாடுபடவேண்டும்.

நமக்கு சுயராஜ்யம் அவசியம் வேண்டும். இதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. ஆனால் அதற்கு விரோதமாய் நமக்குள் பிராமணர், பிராமணரல்லாதார் இன்னும் எத்தனை பிரிவுகளோ நம்மை வாட்டுகிறது. இந்த சண்டை தீர்ந்துவிட்டால் சுயராஜ்யம் அன்றைக்கே தானாகவே வந்துவிடும்.

"மற்றதேசங்கள் முன்னுக்கு வந்துவிட்டன. நம் தேசம் முன்னுக்கு வாராததற்கு காரணம் நமக்கு சுயராஜ்ஜிய அதிகாரம் கிடையாது. ஆனதால் நம்தேசம் முன்னுக்குவர முடியவில்லை" என்று பதில் சொல்லக்கூடும். ஏன் நமது சமூகத்தை முன்னாடி சீர்திருத்திக்கொள்ளக்கூடாது. சமூகம் திருந்திவிட்டால் சுயராஜ்ஜியமும் அதுவே, சமூகம் கட்டுப்பாடாக இருந்தால் சுயராஜ்ஜியம் எப்படி வாராமலிருக்க முடியும், சர்க்கார் என்ன செய்ய முடியும், சமூகம் சீர்குலைந்து இருக்கிறது சர்க்காருக்கு நன்றாய் தெரியும். ஆனதுபற்றி நாம் என்னபாடு பட்டாலும் சமூக ஒற்றுமை இல்லாமல் சுயராஜ்ஜியம் வாராது. இவ்வளவு ஜாதி எங்கிருந்து வந்தது. எல்லாம் அவர் அவர்கள் சுயநலம் கருதி ஆயிரம் ஜாதிகளாக்கி நம் இந்தியாவை ஆட்டிவைத்துவிட்டார்கள். ஆகையால் இந்த சுயநலம் கருதிய ஜாதிக் கூட்டம் எப்போது தொலையுமோ, அன்றைக்கு இந்தியாவை பிடித்த சனியன் தானும் தொலைவான்.

என்னுடைய வாதம் என்னவென்றால் தங்களைப்போல் உள்ள பத்திரிகைகள் இந்த சனியன் பிடித்த சமூக கட்டுப்பாட்டை பிளந்து எறியவேண்டும். ஆதிகாலத்தில் ஒருவன் கடல் தாண்டி வெளிதேசம் போனால் அவனுடைய பந்துக்கள் மறுபடியும் அவனை ஜாதியில் சேர்க்கமாட்டார்கள். இப்போது இந்த கட்டுப்பாடு எங்கே போய்விட்டது. மற்ற தேசங்களைப்பார்த்து வயிறு எரிவதில் என்ன பிரயோஜனம். நம்முடைய சமூகக் கட்டுப்பாட்டை இடித்தெறிந்தால் நாமும் மற்ற தேசங்களைப்போல் முன்னுக்கு வந்துவிடலாம், மற்ற தேசத்தாரும் நம்மை ஒரு இந்தியன் நேஷன் (இந்திய சமூகம்) என்று அழைப்பார்கள். இப்போது நம்மை ஒரு இந்தியக் கூலிஎன்று கூப்பிடுகிறார்கள். காரணம் கேட்டால் "உங்கள் ஊரில் நீங்கள் மற்றவனை தொடமாட்டீர்கள் அப்படி இருக்க நீ கருப்பு கூலிமனுஷன் எங்கள் ஊருக்கு வந்து உங்களை சரி சமானமாக நடத்தும்படி கேட்கிறீர்கள், ஆகையால் உங்கள் ஊரில் இருக்கும் தீண்டாதவர்களை முன்னாடி சரி சமானமாக நடத்துங்கள் பிறகு நாங்களும் உங்களை சரி சமானமாக நடத்துகிறோம்" என்று சொல்லுகிறார்கள். இது நியாயமே. நமது ஊரில் நம்முடைய சகோதரர் இந்துக்கள் என்போர்கள் எப்படி, மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இது உங்களுக்கு நன்றாய் தெரியும்-நம்முடைய சொந்தசகோதரரை நாம் அனுசரிக்காமல் ஜாதி இழிவாய்.

புக்கொண்டு இந்து மதம் வேதம், புராணம், என்பதாக கண்டபடி சுயநலம் கருதி அவர்களை பராமரிக்காமலும், அவர்களை நாய்க்கும் கேவலமாக நடத்திவந்ததால் அவர்கள் அன்னிய மதத்தை தழுவும்படி வந்துவிட்டது. இப்பேர்பட்ட விஷயங்களை எப்போதும் மேன்மேல் எடுத்துச்சொல்லி, சமூகத்தை சீர் திருத்தி இருக்கவேண்டும். சுயராஜ்ஜியம் என்றால் சும்மா வந்துவிடுமா. எவ்வளவோ கஷ்டப்பட்டு சமூகத்தையும் சீர்திருத்திக்கொண்டுபோனால் ஜல்தியில் சுயராஜ்ஜியமும் கிடைக்கும். சுயராஜ்ஜியம்பெற்ற தேசமெல்லாம் சமூகத்தை சீர்திருத்திக்கொண்டுதான் பெற்றிருக்கிறது. நம் தேசத்தில் மதுவிலக்கு பிரசாரமும் நீண்ட நாளாகவே நடந்துவருகிறது. இன்னும் அதை ஒழிக்கமுடியவில்லை கதரை ஆதரிப்பது என்று எவ்வளவோ பிரசாரமும் நடந்துவருகிறது. இதுவும் ஜெயமடையவில்லை, காரணம் அந்நிய அரசாட்சி அல்ல, நமது சமூகம் சீர்குலைந்து இருப்பதே நமக்குள் ஒற்றுமை கிடையாது. எப்போதும் நாம் ஜாதி, மதம். இவைகளைச்சொல்லிக்கொண்டு சண்டை போட்டுக்கொண்டு ஒருவருக்கொருவர் பிடிப்பு இல்லாமல் இருப்பதே காரணம். ஒரு பிரபு சாகுந்தருவாயில் தனது சொத்தை எந்தவிதமாக தர்மம் செய்யவேண்டுமென்று நினைத்தால் நமது குடியைக்கெடுத்த நமது மதம்; சாஸ்திரங்களின்படி ஒ சத்திரம் கட்டி தினம் 100 பிராம்மணர்களுக்கு சோறு போட்டுக்கொண்டுபோனால் மோட்சம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அது என்ன அநியாயம். ஒரு பள்ளிக்கூடம் கட்டி ஜாதி வித்தியாசம் பாராமல தினம் 100 பிள்ளைகளுக்கு படிப்புச்சொல்லிக் கொடுக்கலாமென்றாலோ "சூத்திர பிள்ளைகளுக்கு படிப்புக் கற்றுக்கொடுத்தால் தர்மம் செய்தவர் மகாபாவத்துக்கு போவார்" என்று நமது சாஸ்திரம் சொல்லுகிறது. இது சுயநலம் கருதியவர்களால் எழுதப்பட்டதா? இல்லையா? இப்பேர்ப்பட்ட விஷயங்களை தாங்கள் எடுத்துக்காட்டுகிறது கிடையாது. இப்போது நமது ஊரில் எவ்வளவோ தர்ம சொத்துக்கள் பாழாய் கிடக்கின்றன இவைகளை சர்க்கார் அல்லது சமூக சீர்திருத்தக்காரர் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு எல்லா தர்மஸ்தாபனங்களையும், ஆரம்பப் பள்ளிக்கூடமாக கல்வி, கைத்தொழில், இவைகளை ஆரம்பித்து வந்தால், தேசம் க்ஷேமமடையும். இப்போது தர்மசொத்துக்கள் எப்படி இருக்கிறது என்றால்; மடாதிபதிகளும், மகந்துகளும், குருக்கள்மார்களும் ராஜபோகத்தில் அனுபவித்துக்கொள்ள உபயோகப்படுகிறது இதைக்கேட்பார் கிடையாது. தேசம் எப்படியானாலும் அவர்களுக்கென்ன. பல்லக்கு பேரில் சவாரி செய்தால் அதுவே அவர்களுக்கு போதும், ஆனால் நமது சத்தியமூர்த்தி அய்யர் "நெப்போலியன் அரசாட்சி காலத்தில் ரோமாபுரியில் கோவில் தர்ம சொத்துக்களை தன்வசமாக்கவேண்டும் என்று பெரிய பாதிரி போப்பை கேட்டான். ஆகையால் அவன் ராஜ்யம் அழிந்தும்போய்விட்டது. அப்படி இந்த சர்க்காரும் தர்ம சொத்துகள் தலையில் கையை வைத்தால் அழிந்துபோய் விடுவார்கள் என்று உதாரணம் காண்பிக்கிறார் சர்க்கார் தர்ம சொத்துக்களை எடுத்துக்கொண்டு சேனைகளுக்கும் வெள்ளைக்கார உத்தியோகஸ்தருக்கும் செலவிடுகிறான் சொல்லவில்லை. தர்ம சொத்துக்களையெல்லாம் சர்க்கார் மேல்பார்வையிலிருந்து எல்லா தர்ம சொத்துக்களையும் உண்மையான தர்மமான மதக்கல்வி, கைத்தொழில் கல்வி. தேசிய கல்வி முதலானவைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். "போப் தலையில் நெப்போலியன் கையை வைத்தால் ராஜ்யம் அழிந்து விட்டது." என்று சத்தியமூர்த்தி சொல்லுவதானது சுத்த அபத்தம் தர்ம சொத்துக்களை எடுத்தும் பிரான்ஸ் தேசம் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கிறது. இவ்விடம் தர்மசொத்தில் சர்க்கார் தலையிட்டால் தன்னுடைய சமூகத்தின் வாயில் மண் விழுந்துவிடும் என்று சத்தியமூர்த்தி அய்யர் பயப்படுகிறாரே அல்லாமல் வேறல்ல என்று நினைக்கிறேன். இப்போது நமது ஊரில் இருக்கும் கோவில்கள் முழுமையும் சர்க்கார் மேல்பார்வை வைத்துக்கொண்டு கைவசப்படுத்தி மிஞ்சி செய்ய வேண்டிய செலவுபோக மிச்ச சொத்துக்களை மதக்கல்வி, தேசாபிமானக்கல்வி ஆரம்பக்கல்வி முதலியவை கற்றுக்கொடுக்க கூடிய கல்விகளை நமது இளைஞர்களுக்கு கற்றுக்கொடுக்கால் கோவிலுக்குப்போய் சுவாமியை கும்பிட்டு அடையும் பலனுக்குமேல் அடையலாம். ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் காலத்திற்கு தக்கபடி நமது பழக்கம், வழக்கம் உடைகள் எல்லாமே நமது சக்திக்கு தக்கபடி மாற்றிக்கொள்ள வேண்டும். நான் வெள்ளாளன் நான் வேளாண்மைத்தொழில் செய்தால்தான் என் ஜாதிக்கு அடுக்கும் என்று சின்னப்புத்தி பேசி நான் ஊரில் குந்தி இருந்தால் எனக்கு என்ன தெரியும். ஜாதி, மதம் இவைகள் பெரும் புரட்டு. சில பேர்வழிகள் பிழைப்புக்காக இந்தமாதிரி ஜாதியும் ஏற்படுத்தி, நாசஞ்செய்து நம் தேசத்தை உறிஞ்சுவருகிறார்கள். என்று நினைத்து வெளியூர் கிளம்பி விட்டேன். நான் கடவுள் ஆசிர்வாதத்தால் க்ஷேமமாக இல்லையா, என்னுடைய ஜாதி, மதம் என்னை முன்னுக்கு கொண்டுவந்ததா? இல்லை அன்பு அறிவு சன்மார்க்கம், தைரியம்; இதுதான் ஒரு மனுஷனுக்கு வேண்டும், இதுவே கடவுள் தன்மை என்றும் நினைத்திருக்கிறேன். தங்களுடைய பத்திரிகைகளை சுமார் 20 வருஷமாக நான் படித்து வருகிறேன். நான் எப்போதும் எந்த சங்கத்துக்கும் பத்தில் எழுதுகிற வழக்கமே இல்லை. தாங்கள் ஸம்மத வயது விஷயத்தில் ஒரு படசமாக எழுதி இருப்பதைப் படித்து அடக்கமுடியாத துக்கம் ஏற்பட்டது. ராத்திரி முழுதும் ராம நாடகம் கூத்துப் பார்த்துவிட்டு, காலையில் ராமருக்கும், சீதைக்கும் என்ன நடந்தது என்று ஒருவர் கேட்டதாக ஒரு பழமொழி. அதுபோல் பால்ய விவாகத்தில் இருக்கிற கெடுதல்களை நீங்களே அடுக்கி அடுக்கி எழுதிவிட்டு, கடைசியில் சன்னமாக பொடிவைத்து விட்டீர்கள். ஆங்காங்கு இந்த மசோதாவால் பாதிக்கப்படக்கூடியவர்கள் கூடி யோசனைசெய்து தங்களுடைய அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டுக்கு தெரிவிக்கவேண்டும். அதனுடன் குழந்தைகள் தாய்களாகப்படுவதைத் தடுக்க ஆங்காங்கு கட்டுப்பாடு செய்துகொள்ளவேண்டும். அப்படிப்பட்ட கட்டுப்பாடு ஜனங்களுக்குள் இருந்தால், அவர்களுடைய சமூக வாழ்வில் கவர்ன்மெண்டார் புக காரணமிராது. தங்கள் அபிப்பிராயப்படி ஆங்காங்கு கூட்டம் கூடி எங்களுக்கு இந்த மசோதாவேண்டாம், நாங்கள் எங்கள் பெண்களுக்கு 10 வயதில் கலியாணம் செய்து எலிக்குட்டி பிள்ளைகளை பெற்றுக்கொண்டு, பலம் அற்று, புத்தி அற்று; என்றும் அடிமையாக இருக்க இஷ்டம் என்று கவர்ன்மெண்டாருக்கு தெரிவித்துவிட்டு மசோதா வேண்டாம் என்றும் சொன்னால் உங்களுக்கு இஷ்டம்போலும், நமக்கு பூரா சுயராஜ்யம் வேண்டுமானால், நமது மூளையில் நீண்டநாளாக ஊறி இருக்கும் சில கெட்டபழக்க வழக்கங்களை விட்டு தலையை முழுகிவிட்டு, வீரர்கள் மாதிரி வெளிவந்து நாங்களும் இந்தியர்கள் எங்களுக்கு எங்கள் ஊரை ஆளத்தெரியும் என்று செய்கையில் செய்து காட்டவேண்டும். இப்படி நாம் எல்லோரும் ஒத்து, கொஞ்சமாகிலும் நமது பழக்க வழக்கங்களையும், மதம், ஜாதி கட்டுப்பாடுகளையும், தளர்த்தாமல் போனால் அன்னியனுக்கு நாம் எப்போதும் அடிமைத் தொழில் செய்துதான் வரவேண்டும். இதில் என்ன சந்தேகம். ஆதிகாலத்தில் சுயநலப் புலிகள் இந்து சாஸ்திரம் எழுதிவைத்தார்கள். அதாவது, தகப்பன் இறந்துபோனால் பாப்பானுக்கு, கடன்பட்டாவது ஒரு பசுமாடு வாங்கி தானம்செய்தால் உன்னுடைய தகப்பன் மோட்சம் போவான். இல்லாவிட்டால் நரகத்துக்கு போவான் என்று சாஸ்திரம் சொல்லுகிறது அல்லவா, அதே இந்து சாஸ்திரம் எழுதிவைத்த சந்ததியார் அநேகம் பேர்கள் இப்போதும் இருக்கிறார்கள் அல்லவா, தேச முன்னேற்றத்தை முன்னிட்டு, கதர் கட்டுவது புண்ணியம், மதுபானம் செய்யாமல் இருந்தால், மோட்சம் பெண்களுக்கு கலியாண வயது 18, பிள்ளைகளுக்கு கலியாண வயது 25, இப்படி செய்தால் காசிக்கு போன பலன். எல்லா சிறுவர்கள், ஆண், பெண், இருவர்களும் 5 வயது முதல் கொண்டு பள்ளிக்கூடம் போய் கல்வி கற்று வந்தால் ராமேஸ்வரத்துக்கு போன புண்ணியம். எல்லா ஜாதி மதத்தினரும் அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கை, மாதிரி பழகி வரவேண்டும், அன்னியர் ஆட்சி வேண்டாம். இப்படி செய்தால் உலகயாத்திரை செய்த புண்ணியம் உண்டு என்று, ஏன் இப்போது சாஸ்திரம் எழுதி ஜனங்களை நல்ல வழிக்கு கொண்டுவரக்கூடாது. இந்த மாதிரி சுயநலப்புலிகள் ஒரு போதும் சாஸ்திரம் எழுதாது. இந்த மாதிரி சாஸ்திரம் எழுதினால் சாஸ்திரம் எழுதினவர்கள் சோத்துக்கு திண்டாடவேண்டிவரும். நல்ல வழியில் சாஸ்திரம் எழுதி இருந்தால், ஏன் இந்த இந்திய மக்கள் 30 கோடிகள் சோற்றுக்கு திண்டாடும். நமது தேசத்தில் ஒரு வகுப்பார் மேன்மையடையவேண்டி இந்த பொய் சாஸ்திரங்கள் எழுதிவைத்து, நம்மை அன்னியருக்கு அடிமையாக்கிவைத்து விட்டார்கள்.

குறிப்பு:— சுதேசமித்திரனுக்கு இதன் அசலை அனுப்பி நமக்கு அதன் நகலை அனுப்பி இருக்கிறார்கள். ப—ர்.

பார்ப்பனரல்லாதார்
சமூக முன்னேற்றத்திற்கு
உண்மையுடன் உழைப்பவன்

"குமரன்"

ஆதலின் இன்றே சந்தாதாரராய்ச்சேர்ந்து நாட்டின் விடுதலை வழி கடைப்பிடியுங்கள்.

ஆணித்தரமான அபிப்பிராயம்,
அச்சமற்றகண்டனம் ஏராளமான செய்தி.
தேனென இனிக்கும் செந்தமிழ்நடை,

தேசிய தமிழ் வாரப்பத்திரிகைக்குள் தலைசிறந்து,
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
ஏராளமான சந்தாதாரர்களை உடையது.

எனவே விளம்பரத்திற்குத் தகுந்த பத்திரிகை
'குமரன்' அன்றிவேறில்லை.

இன்றே மானேஜருக்கு எழுதி விபரம் அறியுங்கள்
மாதிரிப்பிரதி இனும் !

மானேஜர்.
தனவைசியன் கம்பெனி லிமிடெட்
காரைக்குடி

'குமரன்'

வழிபற்றி உண்மை நெறி காண்மின்!

வாரப்பதிப்பு
வருடச்சந்தா
உள்நாடு ரூ. 5
வெளிநாடு ரூ. 6

மாதப்பதிப்பு
வருடச்சந்தா.
உள்நாடு ரூ. 1-8-0
வெளிநாடு ,, 2-0-0

மானேஜர்.


# சேலம் முனிசிபாலிட்டி.

## நோட்டீஸ்

காளது ஆடி மீ 26-உ (10—8—27) புதன்கிழமை முதல் 29-ந் தேதி (13-8-27) சனிக்கிழமை வரையில் சேலத்தில் மாரியம்மன் திருவிழா காலத்தில் செவ்வாய்ப்பேட்டை சந்தைப்பேட்டையில் கால் நடை சந்தை கூடும். அதே சமயத்தில் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் கால் நடை விவசாயம் கைத்தொழில் வகையறா காட்சியும் வைக்கப்படும், சிறந்தவைகளுக்கு பரிசுகள் அளிக்கப்படும். உயர்ந்த கால் நடைகளையும் கைத்தொழில வகையறா சாமான்களையும் அச்சமயம் கொண்டுவரவேணுமாய்க் கோறப்படுகிறது.

S. தம்மண்ண செட்டியார்,
சேர்மேன்.


பழநி சி. எம். சாமி



# குருதாம்பரபஸ்பம்

## சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது ஆராத குழிபுண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்
50 நாள் 100 வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுப்பானமும்விலை ரூ. 25 ஏழைகளுக்குப்பாதிவிலை

இனுமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் போற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது மேகவியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நீர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.


சித்த ஆயுள்வேச வைசதிய ஆசிரியர்,
**மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை



இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



# கணித சோதிடம்

பரகித் கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதி நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விசேஷமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக காலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.


கோயமுத்தூர்:— குனியமுத்தூர் என்னும் கிராமத்தில் பிராமணீயம் ஒழிந்த திருமணம் யூனியன் போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் ஜி. அக்கண்ண நாயுடு அவர்களின் முப்பதியூரில் 11—7—27ல் 1 சிரஞ்சீவி ரசஜகோபால் நாயுடுக்கும் சௌபாக்கியவதி காவேரியம்மாளுக்கும், 2 சிரஞ்சீவி ராமசாமிநாயுடுக்கும் சௌபாக்கியவதி பங்காசம்மாளுக்கும், 3 சிரஞ்சீவி அய்யாசாமி நாயுடுக்கும் சௌபாக்கியவதி செல்லம்மாளுக்கும, 4 சிரஞ்சீவி பாலாஜி நாயுடுக்கும் சௌபாக்கியவதி தனலக்ஷிமி அம்மாளுக்கும பிராமணரல்லாதார் புரோகிதரைக்கொண்டு திருமணங்கள் நடத்தப்பட்டன. திருவாளர் ஜே. என் ராமநாதன் அவர்கள் நமது முன்னேற்றம் என்பது பற்றி பேசினார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சூத்திரன் தவஞ்செய்வதால் என் குழந்தை இறந்துபோக நேர்ந்தது. என்று சொல்லி "கடவுள அவதாரமாகிய" ராமரிடம் பிராது செய்தாராம். ராமர் விசாரணை செய்ததில் "சூத்திரன்" தவம் செய்தது வாஸ்தவமாயிருந்தால் தவம் செய்யும் உரிமை "சூத்திரனுக்கு" இல்லையென்று கருதி "சூத்திரனுடைய' சிரசை சேதித்து விடும்படியாக ஆக்ஞாபித்தாராம். திரேதாயுகத்தில் கடவுள் 'அவதாரம் செய்ததாலுண்டான தன்மையே இப்படியிருக்குமானால் இவ்வண்ணம் மற்ற யுகங்களிலும் அவதாரம் செய்யப்போவதானால் வினையும் தன்மைகளும் எப்படியிருக்கும் என்பதை நீயே யோசித்துப்பார். இப்பேர்ப்பட்ட ராமர் தான்மஹா புண்ணிய புருடரென்று உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. முழு முட்டாள்களும் கூட செய்யத்துணியாத இத்தகைய சாஹஸ கர்மத்தை ராமர் என்பவர் செய்தாரென்றால் அவரைக் கடவுள் அவதாரம் என்று நாம் சொல்லிக்கொள்வதென்றால் நமது யோக்கியதையை நீயே யோசித்துப்பார். இதைவிட "சூத்திரர்"களையெல்லாம் சமுத்திரத்தில் தள்ளிவிடவேண்டுமென்ற உத்திரவிட்டால் அது மிகவும் பெரிய கடவுள் அவதாரமாயிருக்குமன்றோ? என்ன அநியாயம். என்ன அநீதி. யோசித்துப்பார். ஆனால் இதில் ஒரு சூழ்ச்சி இருக்கிறது. அதாவது 'சூத்திரன்' தவஞ்செய்ய உரிமையுடையனல்லவென்று "அவதார புருடரான" ராமரே நிச்சயித்திருக்கிறார் என்றால் மற்றயாவரும் அதைச் செய்ய மாட்டார்களல்லவா? இதுதான் அதன் ரகசியம். இது எப்படி வந்ததென்றால், சிலர் சுயநலத்திற்கு ஏற்படுத்தின கட்டுக்கதைகள்போல் இதுவுமொன்று என்பதும் எத்தனையோ மூடக்கதைகளை நம்புவதுபோல் 'இதையும் நம்புகிறோம் என்பதினாலும் வந்ததேயாகும்.

சுப்பு:—"சூத்திரன்" தவஞ்செய்தால் பிராமணனுடைய குழந்தை இறந்துபோகுமா? அப்படியானால் இப்பொழுதுள்ள சூத்திரர்களெல்லாம் தவஞ்செய்தால் பிராமணர்களுடைய குழந்தைகளெல்லாம் செத்துப்போய்விடுமே. சூத்திரன் தவஞ்செய்வதால் எங்கள் குழந்தைகளெல்லாம் இறந்துபோகின்றனவென்று பிராமணர்கள் பிராது செய்துகொண்டாலும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தார் அதை கவனிக்கவுமாட்டார்கள். ஆகையால் 'சூத்திரர்கள்' நினைத்தால் இப்பொழுதுள்ள பிராமணர்களின் வம்சத்தையே இல்லாமல் செய்யமுடியுமல்லவா? இது என்ன கதை. ஜாதித்துவேஷம் தங்களிடமில்லையென்று சொல்லிக்கொள்வோர் இத்தகைய கதைகளை இன்னும் நெருப்பிலிட்டுச்சுடாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மவர்களும் இதைப்படிக்கக்கேட்க காது கொடுக்கிறார்கள். ராமர் திரேதாயுகத்தில் 'சூத்திரனுடைய' சிரசை சேதித்த பாவத்தை பரிஹரிக்கவேண்டி, இக்கலியுகத்தில் ஒரு சூத்திர வம்சத்தில் ஒரு ராமராயவதரித்து சத்யாக்ரஹங்களை வழங்கி தாம் அந்த யுகத்தில் செய்தது பெருந்தப்பிதமென்றும், சூத்திரர்களுக்கும் சகல உரிமையும் உண்டு என்றும், சுயமரியாதைப் பறையைச் சாற்றிவருகின்றார்போலும்.

குப்பு:— ஆம் ஆக்ஷேபனை என்ன? பார்ப்பனர்களின் சட்டுக்கதைகளை பார்த்துக்கொண்டு சிவன் பெரிதா விஷ்ணு பெரிதா என்றகேள்விகளை கேட்டுக்கொண்டு திரிவதால் அந்நிய ஆட்சிக்குள் அகப்பட்டு அடிமைக் குழியிலழுந்திக்கிடக்க நேர்ந்திருக்கிறது. இதைபறிக்க கலியுக ராமாவதாரி 'குடியரசு' என்ற ஒரு கயிற்றை வீசுகின்றார். அதைக்கைப்பற்றினால் சுய மரியாதை என்ற கரை ஏறலாம். சிவன் பெரிதா? விஷ்ணு பெரிதா என்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு கடவுளின் அகண்டானந்தவிக்ரஹத்தை அறியாமல் வீண் கலகம் செய்வதால் அந்நிய மதத்தினர்களின் பரிகாசத்திற்கு பாத்திரர்களாகவும், என்றும் மீளாத அடிமைத்தளத்திலழுந்திக்கிடக்கவும் தான் பாத்திரமாயிருக்கமுடியும். எது பெரிது என்ற சந்தேகங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகியும் இன்னும் நீங்கினபாடில்லை.

சுப்பு:—சிவ புராணத்தில் சிவன் பெரிதாகவும், விஷ்ணு புராணத்தில் விஷ்ணு பெரிதாகவும் கூறியிருப்பதால் எது பெரியதென்றறியவேண்டுவதவசியமல்லவா?

குப்பு— எது உங்களுக்கும் இந்த ஐயம் அடிக்கும்போல் தோன்றுகிறது. பெரிய பண்டிதர்களுக்கும் ஐயம் நீங்காமலிருக்க உங்களுக்குமட்டும் அது உண்டாகாமலிருக்க வழியில்லை. "ஏகச்சித்தாசிவ இத்யுக்த ஏகச்சித் விஷ்ணுரித்ப்ரோக்த" என்ற சுருதியின் நீதியாய் ஒரே கடவுளுக்கு சிவனென்றும் விஷ்ணுவென்றும் பல நாமங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பல நாமங்கள் இருந்தால் வஸ்து ஒன்றுதான். சைவர்களுக்கு ஒரு சூரியன் வைணவர்களுக்கு ஒரு சூரியன் என்று இரண்டு சூரியர்கள் உண்டா? ஒவ்வொரு மதத்தினர்களுக்கும் ஒவ்வொரு கடவுளிருந்தால் சூரியன் சந்திரன் பஞ்சபூதங்கள் முதலான ஸ்ருஷ்டி ஜாலங்களையெல்லாம் ஒவ்வொரு மதத்தினருக்கும் தனித்தனியாக ஸ்ருஷ்டி செய்திருக்க வேண்டும் அவ்வண்ணம் காணாமையால் கடவுள் ஒருவர்தானென்றும் ஏற்பட்டது. அரியும் சிவனும் ஒன்று. அறியாதவர் வாயில் மண்ணு' என்று கேட்டதில்லையா?

சுப்பு— இதென்ன? பெண்டுகள் பேசுவது தானே!

குப்பு—ஓஹோ நம்பெண்டுகளைவிட சோணகிரிகள் அறிவாளிகளென்று நினைக்கிறீர்களா? அது ஒருக்காலும் இல்லை சமயச்சண்டைகளும் சுயநலக்கட்டுக்கதைகளும் மூட நம்பிக்கைகளும் ஒழிந்தாலன்றி நம் தேசமும் சமூகமும் விடுதலையடையமுடியாதென்பது நிச்சயமான முடிவு.

---

திருமணம்:—தோழுந்தூர் திருவேலாயுத முதலியார் அவர்கள் குமாரர் சமீனத முதலியாருக்கும் அவ்வூர் ஸ்டேஷன் மாஸ்டர் திரு எ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி ஆனந்தவல்லியம்மைக்கும் மங்கம்மாள் பங்களாவில் 24-6-1927 வெள்ளிக்கிழமை சிறப்புடன் திருமணம் நடந்தது அதற்கு அதிகாரிகள் வியாபாரிகள் முதலிய சகலரும் விஜயம் செய்திருந்தனர். மாலை சங்கீதக்கச்சேரியும் நடந்தது என திரு கே. என். நாராயணசாமி பிள்ளை நமக்கு எழுதுகிறார்.

கோவையில் 6-7-27 ல் திரு ஆர் ரெங்கசாமி நாயுடு அவர்களுக்கு பார்ப்பனீயமற்ற திருமணம் நடந்தது.

அறுப்புக்கோட்டை பிரபவ ஆனி 10-ந் தேதியில் சொக்கலிங்கபுரம் திரு சொ. அ. செ. முத்துககாமாட்சி செட்டியார் அவர்கட்கும் சௌ. உண்ணாமலை அம்மாளுக்கும், 13-ந் தேதியில் திரு பெ. முத்துகாமாட்சி செட்டியாருக்கும் சௌ. கோம்தியம்மாளுக்கும் திருமணம் இனிது நடந்தேறியது என்று திரு சோமசுந்தரம் அறிவிக்கிறார்.

மதுரை ஜவுளிவணிகம் திரு அ. சி. தனுஷ்கோடி நாயுடு அவர்களுக்கும் தஞ்சை செல்வி சுந்தரத்தம்மாளுக்கும் 6-7-1927ல் திருமணம் இனிது நடந்தேறியது.

## காங்கிரஸ் தலைவர் பதவி வினியோகம்.

---

இவ்வருடக் கோடியில் சென்னையில் கூடும் காங்கிரஸ் என்னும் கூட்டத்திற்கு தலைவராக நமது பார்ப்பனர்கள் டாக்டர் அன்சாரி அவர்களை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். என அறிகிறோம்.

சென்ற வருடக்காங்கிரசுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அப்பதவி பெறுவதற்கு செலவு செய்தது போல் பணம் கொடுக்காவிட்டாலும் டாக்டர் அன்சாரி அவர்களிடம் அதற்கும் மேற்பட்டதான பெரிய மதிப்புள்ள விலை பெற்றுக் கொண்ட பிறகு தான் நமது பார்ப்பன "தேசபக்தர்கள்" என்போர்கள் டாக்டரை தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

அந்த விலை எது என்றால் அது தான் "மகமதியர்களுக்கு தனித்தொகுதி வேண்டியதில்லை" என்று சொன்னதாகும். டாக்டர் அன்சாரி அவர்கள் மகமதிய சமூகத்திற்காக ஒப்புக்கொண்டதாக சொல்வதைகமற்ற மகமதியர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பதைப்பற்றி நமது பார்ப்பனர்களுக்கு அவசியமில்லை. எப்படியாவது அவர் காரியத்தை சாதித்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். இப்போது ஸ்ரீமான்கள் ஒரு கந்தசாமி செட்டியாரையும், ஒரு முத்தய்ய முதலியாரையும், ஒரு குப்புசாமி முதலியாரையும், பிடித்துக் கொண்டு அவர்களையே பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் என்பதாக ஊர் ஊராய் கூட்டி கொண்டு போய் காட்டி எப்படி தங்கள் காரியத்தை சாதிக்கிறார்களோ அது போல் டாக்டர் அன்சாரி அவர்கள் மகமதியர்களுக்கு தனித்தொகுதி வேண்டாம் என்றால் அதுவே மகமதிய சமூக பிரதிநிதித்துவம் என்பதாகச் சொல்லி வரப்போகும் கமிஷனில் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தின் பேரிலேயே இந்தப்பதவி கொடுத்திருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு விரோதமாய் பேசினதினாலும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தை வைததினாலுமே ஸ்ரீமான் முத்தய்ய முதலியாருக்கு சட்டசபை வேலை சம்பாதித்துக்கொடுத்ததும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு உப தலைவரானதினதும் வரப்போகும் காங்கிரசுக்கு தற்கால வரவேற்பு கமிட்டி தலைவரானதினதும் யாவரும் அறிவார்கள்:—

டாக்டர் அன்சாரி அவர்களை காங்கிரஸ் தலைமையில் இருந்து கொண்டு மகமதிய சமூகத்திற்கு தனித்தொகுதிவேண்டியதில்லை என்று சொல்லும்படி செய்தாலும் கூட நமது மகமதிய சகோதரர்கள் ஏமாந்து விடமாட்டார்கள் என்பதே நமது உறுதி. இப்பொழுதிருந்தே அதற்கு வேண்டியவேலைகள் செய்து கொண்டுவருவதையும் நாம் அறிவோம். ஆனாலும் இப்பதவிகளை பார்ப்பனர்கள் தங்களுக்கு எப்படி அனுகூலப் படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதற்கே இதை குறிப்பிட்டோம்.

இப்பழனியில் அநேக நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும் பெற்று தீராதென கைவிடப்பட்டவியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.



பாலாம்பிகை டிரேட் மார்க்

# முதல் நெம்பர் தங்க பற்பம்.

## தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பலவித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைச் செட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அதிக இன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய் 36—0—0
இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை 20—0—0
மேற்படி 25-நாள் விலை 10—0—0
அனுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ. 10—0—0
[தபால் சார்ஜ் பிரத்தியோகம்]

# அசல் வெள்ளி பற்பம்

## பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி பஸ்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், சிணுக்கிரும் பல், தும்மல் விழுதல், வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், தேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கியிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும் தேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது இதை மதனகாமேஸ்வரிலேகிய அனுபானத்தில் சாப்பிட வேண்டும். ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய் 15—8—0

½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம் விலை 7—8—0
ஒரு மண்டலம் மதன காமேஸ்வரி லேகியம் ... ... விலை 8—0—0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்

## நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி கரணங்கள் சற்று இளகும் அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் நீற்றுப்போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினால் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்திசெய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்] விலை ரூ. 15-8

## தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம், ஈளை, கோழை கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 7—0—0
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 5—0—0
லேகியம் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயனம் 10-நாளைக்கு விலை ரூ. ..—8—0
[தபால் செலவு வேறு]

## நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுற்று மருந்து. முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ, 10—0—0
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 6—0—0
தபால் செலவு வேறு

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுள்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டு, அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். L கல்யாணராமய்யர் ரிடயர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இறங்குவதும், தேக அசதியும், தலை மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷ்டப்பட்டு இம் மலாய் நாட்டில் அநேக மருந்து சாப்பிட்டும்! ஊசி மூலியமாக தேகத்தில் மருந்து செலுத்தியும், சவுகரியப்படாமல் கஷ்டப்பட்டு இருக்கையில், சென்னையில் பிரசுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். ஏழையின்மீதில் கிருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும், 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரிசியெடையாகச் சேர்த்து காலை மாலை இருவேளையும் மேற்படி பற்பங்களுக்கு அனுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு தங்களால் அனுப்பப்பட்ட சந்தனாதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன் எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம். மேற்படி சுவாமியுடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு குமட்டல், வாந்தி முதலியன இல்லை. ருசியுடன் கூடியது. பத்தியம் தவறினால் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதியஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு நேரில் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக்கொடுப்பாராக! அ. ஆறுமுகம் நெ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய்நாடு.

சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அளவு கடந்த சமத்துவம் வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சொஸ்தம் கொடுப்பவர்; சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணசிசயங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்தில் கஷ்டப்பட்டேன். வியாதியின் குறி தென்படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன். நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் இந்த சுவாமிகளிடம் என்னைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சொஸ்தம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது தேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது, நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில வாழ இருக்கிறேன். கஷ்டப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஆசிர்வதிக்கப்பட வேண்டுமாக கடவுளை வணங்குவேன். (Sd.) K. V. வேங்கடேஸ்வா அய்யர்,
பழனி, 19-2-1925
ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாக்குக்கு இன்றே எழுதவும்.

# ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

சதானந்த மெடிகல் ஹால் பழனி, (தென்னிந்தியா)

மலாய் நாட்டிற்கு நமது ஏஜண்டு, M. E. நாயுடு அவர்கள் டிரஸ்ஸர், 86 டேலுக், கோட்டங்குரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

# சேலம்
## சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக விசேஷமாய்

பட்டு ஜரிகை பெட்டுகளிலும் தயார்செய்த கதர்

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட கைநூலினால் பலவிதமான ஜரிகை பெட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி தினுசுகளும் 45 × 5 ஜரிகைப்பெட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலை பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில தினுசுகளும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும்.

அத்தாக்ஷி பத்திரம்.

ஸ்ரீமான் C V ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V ஜெய கோபால செட்டியார்,

கதர் வியாபாரம், சேலம்





பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை ரீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)




## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், கிமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I.



Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3¼"x 2¼" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.

பிருமம சமாஜம், ஜி. டி. மதராஸ்



## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா

மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதருஸ்.


## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தாவை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.


## தமிழ் புக்கீப்பிங்.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம். விலை ரூபாய் 1.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி



இனாம்! இனாம்!! இனாம்!!!

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு. ஸ்நப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0

5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ 4—8—0

2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!


The Madura Oriental Trading Co.,

Laxmi Cloth Store, MADURA.



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ. 7

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,

George Town, Madras.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.